Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 27 (31.01.2003) வெள்ளிக்கிழமை இதழ் : 122

மொறாயஸ் ஒளிச்சுடர்

பல், மூக்குக் கண்ணாடியகம்

இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.

- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும் வாருங்கள்!

(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

(சி-540)

## வன்னியிலிருந்து அரிசியைப் பெற இனியாவது ஆவன செய்யுங்கள்

### அரசைக் கோருகிறார் யாழ்.அரச அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கான நிவாரண விநியோகத்திற்குத் தேவையான அரிசியை வன்னிப் பிரதேசத்தில் கொள்வனவு செய்வதற்கு, யாழ். அரச அதிபர் - பிரதமரின் செயலருக்கும், புனர்வாழ்வு அமைச்சுக்கும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது.

கடந்த காலங்களில் யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நிவாரண விநியோகத்திற்குத் தேவையான தரமான அரிசியைத் தருவித்துக்கொள்வதில்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணை நடத்த பிரதமர் ரணில் நேற்று உத்தரவு

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்நத மக்களுக்காக வழங்கப்படும் நிவாரண விநியோகத்துக்கென அனுப்பப்பட்ட 500 மெற்றிக் தொன் அரிசி காணாமற்போனது தொடர்பாக, விசாரணைசெய்து நாடாளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, அமைச்சர் மகிந்த சமரசிங்கவுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டிருக்கின்றார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒவ்வொரு அரிசி மூடையிலும் 10 கிலோ மாயம்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட அரிசி மூடைகள் ஒவ்வொன்றிலும் பத்து கிலோவிற்கு மேலாக அரிசி குறைவாக இருந்தமை தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு வந்தடைந்த 'சஜிந்த' கப்பலிலிருந்து அரிசியைப் பொறுப்பேற்பதற்காக யாழ். செயலக அதிகாரிகள் சென்ற

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



பார்லிமெண்டில நல்ல பகிடிப் படங்கள்தான் இப்ப ஓடுது.....

# நிரந்தரத் தீர்வு, விட்டுக்கொடுப்பில் விடுதலைப் புலிகள் மிகவும் ஆர்வம்

## அமைச்சர் மிலிந்த மொறகொட பாராட்டு

(கொழும்பு)

**அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தையில் மிகவும் அக்கறையுடன் செயற்படுகின்றனர் என, அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார். ஒஸ்லோவில் இடம்பெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாடு தொடர்பான விவாதம் நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. அரசாங்கத் தரப்பில் விவாதத்தை ஆரம்பித்து வைத்துப் பேசியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் - விடுதலைப் புலிகள் அரசாங்கத்திற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்புச் செய்கின்றனர். நிரந்தரத் தீர்வு ஏற்படவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் மிகவும் ஆவலாக இருக்கின்றனர். பேச்சுவார்த்தையின்போது, பல விட்டுக்கொடுப்புக்களையும் செய்துள்ளனர் என்று தெரிவித்த அமைச்சர்,

சமாதானப் பேச்சுவார்த்தை வெற்

(10 ஆம் பக்கம் பாாக்க)

## சிங்கள எல்லைக் கிராமங்களுக்கு பிரதமர் ரணில் நாளை விஜயம்!

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள எல்லைக் கிராமங்களுக்கு நாளை சனிக்கிழமை விஜயம் செய்யவுள்ளார். யுத்தம் காரணமாக எல்லைக் கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்களை மீளககுடியமர்த்துவது தொடர்பாகவே பிரதமர் அங்கு விஜயம் செய்யவுளளதாகத் தெரியவருகின்றது.

எல்லைக் கிராமங்களுக்கு விஜயம் செய்யும் அவர், அந்தக் கிராமங்களைப் பார்வையிடுவதுடன் அங்கு தற்காலிகமாக மீளக்குடியேறியுள்ள குடும்பங்களைச் சந்திக்கவுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதநேய கண்ணிவெடிகள் அகற்றும் பிரிவுக்கு அழைப்பு

### யாழிலும் செயற்பட யு.என்.டி.பி. கேட்கிறது

யாழ்.குடாநாட்டில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளில் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவு ஈடுபடவேண்டும் என, யாழ்ப் பாணத்திலுள்ள யு.என்டிபி. அலுவலகத்தில் வைத்து இன்று உத்தியோகபூர்வமாக வேண்டுகோள் விடுக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் சிறான் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இவ் வேண்டுகோள் விடுக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் பார்க்க வன்னியில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை சிறப்பாக அமைந்துள்ளது என்று மாற்றுக் கொள்கைகளுக்கான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வானொலிக் கருவியால் கடற்புலிகள் உளவு விமானத்தை சுட்டு வீழ்த்தினர்

### ஜே.வி.பியின் விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் அறிவிப்பு

நோர்வேத் தூதுவரின் உதவியுடன் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட அதிசக்தி வாய்ந்த நவீன வானொலிக் கருவியைப் பயன்படுத்தியே, விமானப்படையின் உளவு விமானத்தை கடற்புலிகள் சுட்டு வீழ்த்தியதாக விமல் வீரவன்ச நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒஸ்லோவில் இடம்பெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாடு குறித்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்,

தமது வான்பரப்பிற்குள் எத்தகைய விமானங்களும் பறக்கக் கூடாது எனப் புலிகள் தடை விதித்துள்ளனர். அவ்வாறு விமானங்கள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் சிறார்கள் கடத்தலுடன் தமிழ் ஆயுதக்குழுக்கள் சம்பந்தம்

### எமது கட்டுப்பாட்டுப் பகுதியில் எதுவுமில்லை –கருணா



இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில், தமிழ் ஆயுதக்குழுக்கள் இயங்குகின்ற பகுதிகளில்தான் - சிறுவர்கள் காணாமற்போகிறார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இத்தகைய சம்பவம் இடம்பெற்றதாக எந்தவித புகாரும் வருவதில்லை எனப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கருணா தெரிவித்தார்.

நேற்று வவுணதீவில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவைச் சந்தித்துப் பேசியபின்னர் கேணல் கருணா கருத்துத் தெரிவிக்கையில்,

(10 ஆம் பக்கம் பார்க்க)



நேற்றைய சந்திப்பில் ஒஸ்ரின் - கருணா

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

J/F 021 - 2223916, 0777 - 517019

01-505632, 074-612656, 01-390128

(சி-518)

# சதீஸ் நம்பியாரின் அறிக்கையை அரசு கவனத்தில் எடுக்கக்கூடாது

## வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

யாழ்.குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக்குடியமர்வு தொடர்பாக இந்திய இராணுவ ஜெனரல் சதீஸ நம்பியார் வெளியிட்டுள்ள அறிக்கை, சமாதானத்தைக் குழப்புவதாக அமைந்திருப்பதுடன், மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு செல்லமுடியாத நிலையை ஏற்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது. இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம் என, வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நம்பியாரின் அறிக்கையை அரசு கவனத்தில் எடுக்கக்கூடாது.

சதீஸ் நம்பியாரின் இந்த அறிக்கை, 1987 ஆம் ஆண்டு இந்தியப் படைகளை இலங்கையிலிருந்து வெளியேற்றி, அவர்களைத் தலைகுனிய வைத்த செயலுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக அமைந்துள்ளதாக நாம் கருதுகின்றோம் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரியோவான் கல்லூரி மெய்வல்லுநர் போட்டி

பரியோவான் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 4 ஆம் திகதி பி.ப. 2 மணியளவில் பாடசாலை அதிபர் எஸ். தனபாலன் தலைமையில் நடைபெறும்.

## மந்திகையில் தனியார் கட்டடத்தில் தங்கியிருந்த படையினர் விலகினர்

(யாழ்ப்பாணம்)

மந்திகை இராணுவ முகாமுக்குள் இருந்த தனியார் கட்டடம் ஒன்றிலிருந்து படையினர் வெளியேறியுள்ளனர்.

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு அருகில் அமைந்திருந்த இந்த இராணுவ முகாம், படையினர் குடாநாட்டைக் கைப்பற்றியபோது அமைக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்கள் அடங்கிய இருமாடிக் கட்டடம் ஒன்றையும், வீடு ஒன்றையும், விவசாய நிலங்களையும் இந்த முகாம் உள்ளடக்கியிருந்தது.

தற்போது இந்த முகாம் பின்நோக்கி நகர்த்தப்பட்டிருப்பதுடன் இருமாடிக்கட்டடத்திலிருந்தும் வெளியேறி படையினர் வீட்டில் மட்டும் தங்கியுள்ளனர். (ச)

## நெல்லியடியில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மீதான தாக்குதல்; பொலிஸ் அதிகாரி மீது விசாரணை!

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் பொலிஸாரினால் பத்திரிகையாளர் தவச்செல்வம் தாக்கப்பட்டது தொடர்பாக, நேற்றுக் காலை யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழு அதிகாரி நுவான் சந்திரசேகரவினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்த விசாரணையின்போது, நெல்லியடி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜானக குணதிலகவும் தாக்குதலில் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரும் சமுகமளித்திருந்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகளின் விசாரணையின்போது, குறித்த பத்திரிகையாளரை தாம் வேண்டுமென்று தாக்கவில்லை எனவும், சம்பவம் நடந்த இடத்திலிருந்து அவரை ஒதுங்கி நிற்கும்படி கூறியதாகவும் சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தெரிவித்தார்.

ஆனால், அவ்வாறு தனக்கு பொலிஸார் எதுவும் கூறவில்லையென பத்திரிகையாளர் மறுத்தார்.

இந்த விசாரணையின்போது, நீதிமன்றத்தில் பத்திரிகையாளர் தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெறும்படி பொலிஸ் அதிகாரி கோரியிருந்தார். ஆனால், பத்திரிகையாளர் அதற்கு மறுப்புத் தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழுவின் விசாரணை மீண்டும் இடம்பெறும் என்று மனித உரிமை ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## தெல்லிப்பளை வைத்திய அதிகாரி பணிமனை இடம் மாற்றப்படும்

### உயர் பாதுகாப்பு வலயத்துக்குள் இயங்கும்

இதுவரை காலமும் மல்லாகத்தில் இயங்கிவந்த தெல்லிப்பளை வைத்திய அதிகாரி பணிமனை, பெப்ரவரி மாதம் தொடக்கம் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள, தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் இயங்கவுள்ளது.

இதுவரை காலமும் இப்பணிமனை இயங்கிவந்த கட்டடத்திற்கான ஒப்பந்தம், இம்மாதத்துடன் முடிவடைவதாலேயே இந்த இடம்மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. (68)

## அகதிகள் மீள்குடியமர்வுக்கு 15 மில்லியன் பவுண்ஸ் உதவி!

### பிரித்தானிய அரசாங்கம் வழங்கும்

வட - கிழக்குப் பகுதிகளில் யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்துவதற்காக, பிரித்தானிய அரசாங்கம் 15 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ஸை நிதியுதவியாக வழங்கும் என கொழும்பு வந்துள்ள பிரித்தானிய வெளியுறவுச் செயலர் மைக் ஓ ப்ரெய்ன் அறிவித்தார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இலங்கையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள், உலகிற்கு ஒரு பாடமாக அமையும் எனவும் குறிப்பிட்டார்.

# அதிர்ஷ்ட வாரம் 31.01.2003 - 06.02.2003

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

தொழிலில் ஸ்திர தன்மையையும் அதிக அக்கறையையும் கொடுக்கும். பொருள் வரவுக்கு இடமுண்டு. வெளியூர் பிரயாணங்களால் நன்மையுண்டு. இடையிடையே தேகசுகம் பாதிக்கப்படும். வியாபாரிகளுக்கு நல்ல லாபத்தைக் கொடுக்கும். பெண்களுக்கு பொன், பொருள் சேரும். குடும்பத்தில் அமைதி நிலவும். மாணவருக்கு முன்னேற்றமான காலமாகும்.

### இடபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1, 2ஆம் பாதம்

மனச்சஞ்சலத்தைக் கொடுத்தாலும் தொழில் முன்னேற்றமுண்டு. பொருளாதார நிலை சீரடையும். குடும்பத்தில் இடையிடையே சச்சரவுகள் தோன்றி மறையும். மனதில் நோயைப் பற்றிய பயம் இருந்து கொண்டே இருக்கும். வியாபாரிகளுக்கு சமபலன் உண்டு. வியாபாரம் மந்தமாக இருந்தாலும் நஷ்டம் ஏற்படாது. பெண்களுக்கு கணவனின் ஆதரவு உண்டு. மாணவர்களுக்குக் கல்வி முன்னேற்றமுண்டு.

### மிதுனம்

மிருகசீரிடம், 2, 3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்

தேக மெலிவையும், உணவில் நாட்டமில்லாத தன்மையையும் கொடுக்கும். மனதில் ஒரு வித விரக்தி காணப்படும். தொழிலில மந்தகதி காணப்படும். பொருளாதார நிலை சுமாராக இருக்கும். வியாபாரிகளுக்கு நல்ல முனனேற்றமுண்டு. சுமாரான இலாபத்தை எதிர்பார்க்க முடியும். பெண்களுக்கு பிள்ளைகளால் நன்மையுண்டு. மாணவர்கள் அதிக கவனம் தேவை.

### கர்க்கடகம்

புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

உடல்நிலை அடிக்கடி பாதிக்கப்படும் சோர்வு காணப்படும். இருப்பினும் எடுத்தகாரியத்தில் வெற்றி கிடைக்கும். இடமாற்றத்தைக் கொடுக்கும். பொருள் வரவுக்கு இடமுண்டு. வியாபாரிகளுக்கு அதிக முதலீட்டைத் தவிர்ப்பது நல்லது. பொருள் நஷ்டத்தைக் கொடுக்கும். பெண்களுக்குக் குடும்பத்தில் பிரச்சினைகள் தலை தூக்கும். இருந்தாலும் சமாளித்துக் கொள்வீர்கள். மாணவர்களுக்கு உற்சாகமில்லாத வாரமாக இருக்கும்.

### சிங்கம்

மகம், பூசம், உத்தரம், 1ஆம் பாதம்

அதிக சிரமப்பட்டு எந்தக் காரியத்திலும் வெற்றியோடு திரும்புவீர்கள். எந்த வேகத்தில் காசு வருகிறதோ அதைவிட வேகமாகக் கையைவிட்டுப்போகும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நிலை காணப்படும். வியாபாரிகள் பயப்படாமல் முதலீடு செய்யலாம். நல்லலாபம் கிடைக்கும். குடும்பப் பெண்களுக்கு ஆபரணம், புடைவை போன்றன கொள்வனவு செய்யக்கூடிய வாரமாகும். மாணவர்கள் நல்ல முன்னேற்றமடைவார்கள்.

### கன்னி

உத்தரம், 2, 3, 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1, 2ஆம் பாதம்

உடலில் காயங்களைக் கொடுக்கலாம். அவதானம் தேவை, வெளியூர் பிரயாணங்களைக் கொடுக்கும். பணவரவைக் கொடுக்கும். பொருட் சேதத்தைக் கொடுக்கலாம். வியாபாரிகள் நல்ல முன்னேற்றம் அடைவார்கள். தானதருமத்திற்கு அதிக செலவைக் கொடுக்கும். பெண்களுக்குக் குடும்ப சுகம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை செலுத்துவார்கள்.

### துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதம், சுவாதி, விசாகம், 1, 2, 3ஆம் பாதம்

நீதிமன்றம், வழக்குகளைச் சந்திக்க வேண்டிவரலாம். தண்டப்பணம் செலுத்தவேண்டிவரும். மனதில் பயம காணப்படும். பகைவரால் அதிக தொல்லைகள் ஏற்படும். பிரயாணக் கஷ்டம் உண்டு. வியாபாரிகள் அவதானமாக இருக்கவேண்டி வரலாம். பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய காலம். பெண்களுக்கு அதிக அலைச்சலையும் கஷ்டத்தையும் கொடுக்கும் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

### விருச்சிகம்

விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

வெளியூரிலிருந்து பொருள்வரவுக்கு இடமுண்டு. குடும்பத்தில் சுப காரியம் நிகழும். உறவினர்கள், நண்பர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் அமைதியும் சந்தோஷமும் காணப்படும். வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும். பெண்களுக்குக் குடும்பத்தில் எல்லோருடைய ஆதரவும் உண்டு. களஸ்திர சுகம் உண்டு. மாணவர்கள் கல்வியில் அதிக முன்னேற்றம் உண்டு.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

தேகசுகம் பாதிக்கப்படும். மனதில் அமைதி இராது. சிறை செல்லக் கூடிய பலலுண்டு. எந்த விடயத்திலும் அவதானமும், நிதானமும் தேவை. தொழிலில் அதிக கஷ்டங்களை எதிர் நோக்க நேரிடும். வியாபாரிகள் அவதானமாக இருக்கவேண்டும். இல்லையெனில் ஏமாற்றப்படுவீர்கள். பெண்களுக்கு உற்சாகமில்லாத நிலை காணப்படும். மாணவர்கள் கல்வியில் மந்தநிலை காணப்படும்.

### மகரம்

உத்தராடம், 2, 3, 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம்

குடும்பத்தில் சுபகாரியம் நிகழும். விவாகப் பேச்சுக்களுக்கு இடமுண்டு. எப்பொழுதும் கலகலப்பாக இருப்பீர்கள். பெண்களால் அதிக நன்மை கிடைக்கும். பூமி, வாகனம் இவற்றால் நல்ல லாபம் கிடைக்கும். வியாபாரிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பெண்கள் உற்சாகமாகவும், சந்தோஷமாகவும் இருப்பார்கள். பொருள் சேரக் கூடிய பலனுண்டு. மாணவர்கள் அதிக முன்னேற்றமடைவார்கள்.

### கும்பம்

அவிட்டம், 3, 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3ஆம் பாதம்

பொருட் சேதத்தை அல்லது பொருள் இழப்புக்களை கொடுக்கும். தேகசுகம் உண்டு. பகைவரால் தொல்லைகள் ஏற்படலாம். உறவினர் நண்பர்களுக்கிடையில் மனக்கசப்பும், மனதில் பயத்தையும் கொடுக்கும். வியாபாரிகளுக்கு போட்டி, பொறாமை அதிகம் இருக்கும். பெண்களுக்கு உடலில் வியாதிகளைக் கொடுக்கும். மாணவர்கள் ஞாபக மறதியாலும் உடற்சோர்வினாலும் கல்வியில் பின்னடைவைக் கொடுக்கும்.

### மீனம்

பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

தொழில் சிறப்பு உண்டு. இருப்பினும் குடும்பத்தில் சிறுசிறு பிரச்சினைகள் வந்துபோகும். பொருளாதார நிலை சமமாக இருக்கும். பரயாணத்தால் நன்மையுண்டு. உறவினர், நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு நன்மையைக் கொடுக்கும். முதலீடுகள் அதிகமாக இருக்கும். நல்ல லாபம் கிடைக்கும் பெண்களுக்கு மனச் சந்தோஷத்தையும் குடும்ப சுகத்தையும் கொடுக்கும். மாணவர்கள் கல்வி முன்னேற்றமடையும்.

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்


நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இன்றுமுதல்
M.G.R, ராஜசலூஜா நடித்த
இதயக்கனி
வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 காட்சி
TOMB RAIDER
(சி-397)

ராஜா யாழ்ப்பாணம்.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு
விஜய், ஸ்நேகா நடித்த
வசீகரா

10.30, 2.30, 6.00, 9.30
ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

பொன்னாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் J/170 பிரிவில் தனது சேவையைத் திறம்பட ஆற்றி வருபவரும் ஆகிய,

**திரு.வே.இரத்தினம்** அவர்கள்

கிராம உத்தியோகத்தர் தரம் II இலிருந்து தரம் I இற்குப் பதவி உயர்வு பெற்றுக்கொண்டதையிட்டு, எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, அவர் மேலும் பல பதவிகளையும் சிறப்புக்களையும் பெற்றுக்கொள்ள வாழ்த்துகின்றோம்.

மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம்,
பொன்னாலை.
(சி-541)

## அறிவித்தல்

### வரிமதிப்பு அறிவித்தல் - 2003

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் வதியும் நிரந்தரக் குடியிருப்பாளர்கள், தத்தமது குடியிருப்புகளிலிருந்து இடம்பெயர்ந்திருந்தால் 2003 ஆம் ஆண்டுக்கான வரிமதிப்பு அறிவித்தல் படிவத்தை யாழ். மாநகர சபை சோலைவரிப் பகுதியில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

*மாநகர சபை,*
*யாழ்ப்பாணம்.*
*2003.01.30*

(சி-542)

இ.இராமலிங்கம்,
*மாநகர ஆணையாளர்,*
*யாழ்ப்பாணம்.*

## மீளக்குடியமர்வோரில் அடையாள அட்டை இல்லாதோர்

# நிதியுதவி இடைநிறுத்தம் பற்றிய சர்ச்சை பிரதமரின் கவனத்துக்கு!

(யாழ்ப்பாணம்)

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு தேசிய அடையாள அட்டை வைத்திருப்போருக்கு மட்டுந்தான் வழங்கப்படும் என்ற புதிய அறிவிப்பினால் உருவாகியிருக்கும் சர்ச்சை பிரதமரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவாக 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவிருக்கின்றது.

இக்கொடுப்பனவைப் பெறுபவர்கள் தேசிய அடையாள அட்டையைக் கட்டாயமாக வைத்திருக்க வேண்டும் என்றும், தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கு இக்கொடுப்பனவு இடைநிறுத்தி வைக்கப்படுமென்று புதிய அறிவித்தல் வெளிவந்திருக்கின்றது. இதனால் யாழ். மாவட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மேற்படி கொடுப்பனவை இழக்கும் நிலை தோன்றியுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, யாழ். மாவட்டத்திலுள்ள பல்வேறு கிராமியமட்ட புனர்வாழ்வுக் குழுக்கள் தமது கடுமையான ஆட்சேபனையை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களிடமும் இவ்விடயம் குறித்துத் தெரிவிக்கப்பட்டது. இவர்களினூடாக பிரதமரின் கவனத்திற்கு மேற்படி விடயம் கொண்டு வரப்பட்டுள்ளது. (க,ச)

## மாதகலிலும் இந்திய மீனவர் அத்துமீறல்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடற்பரப்பிலும் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடிக்கும் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறறு வருகின்றன. இதனால் உள்ளூர் மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக உள்ளூர் மீனவர்கள் அண்மையில் நியமிக்கப்பட்ட தேவைகளை இனங்காணும் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

## வைகோவின் விளக்கமறியல் நீடிப்பு

பொடாச் சட்டத்தின் கீழ் வேலூர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோவின் விளக்கமறியலை நாகபட்டினம் நீதிமன்றம் மார்ச் 6 ஆம் திகதிவரை நீடித்துள்ளது.

# அமைதிப் பேச்சுக்களின் ஆபத்தை மக்கள் பகுதியில் பரப்புங்கள்!

## கட்சி எம்.பிக்கள் கூட்டத்தில் சந்திரிகா

அமைதிப் பேச்சுக்கள் நடத்தப்படுவதால் ஏற்படும் ஆபத்துக்கள் குறித்து மக்களுக்குக் கருத்துக்களைக் கூறுமாறு ஜனாதிபதி சந்திரிகா பணித்துள்ளதாகப் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ரோகித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பிர்களின் கூட்டத்திலேயே ஜனாதிபதி சந்திரிகா இப்பணிப்புரை விடுத்ததாகத் அவர் தெரிவித்தார்.

அத்துடன் பொ.ஐ.மு.வுடன் ஜே.வி.பி.கூட்டுத் தவிர்க்கமுடியாததென்பது என்றும், ஜே.வி.பி.யுடன் இணைந்தால்தான் ஆட்சியைப் பிடிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்ததாக ரோகித அபே குணவர்த்தன தெரிவித்தார்.

# 24 மணிநேரப் போக்குவரத்துக்கு ஏ - 9 வீதியைத் திறக்கத் தயார்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் - கண்டி வீதியை 24 மணி நேரமும் போக்குவரத்துக்குத் திறந்து வைப்பதற்கான வழித்துணையை வழங்கத் தயாராக இருப்பதாக செஞ்சிலுவைச் சங்கப் பேச்சாளர் டனிக் லூகி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏ-9 வீதிக்கு 24 மணிநேரமும் பாதுகாப்புத்துணை வழங்குமாறு கேட்டால் அதைச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வழங்கும். ஏ-9 வீதி 24 மணிநேரமும் போக்குவரத்துக்குத் திறந்திருப்பது மக்களுக்கு நன்மையளிக்கும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் கூட இவ்வீதியைத் திறந்து வைப்பதற்கு நாம் தடையல்ல. முழு நேரமும் திறந்திருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தயாராக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# வடபகுதிக் கடற்படைத் தளபதியை புறூவ் ஹொவ்டே சந்தித்தார்!

வட- பகுதிக்கான கடற்படைத் தளபதியாக அண்மையில் பொறுப்பேற்றுக்கொண்ட றியர் அட்மிரல் நந்தன துடுவெத்தவை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே சந்தித்துப் பேசியுள்ளார். இந்தச் சந்திப்பின்போது கண்காணிப்புக் குழுவின் ஊடகப் பேச்சாளர் ரொக் கில்சனும் உடனிருந்தார்.

இதேவேளை, அண்மையில் யாழ். வந்த ஜெனரல் புறூவ் ஹொவ்டே யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவைச் சந்திக்க முயற்சித்திருந்தார். ஆனால், அப்போது பொன்சேகா குடாநாட்டில் தங்கியிருக்காததால் பிரதிக்கட்டளைத் தளபதி மேஜர். ஜெனரல் இரத்தினசபாபதியைச் சந்தித்துப் பேசினார்.

இதன்போது உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாகக் கண்காணிப்புக்குழு வட்டாரங்கள் தெரிவித்தன.





உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் நடைபெற்ற விளையாட்டு விழாவின்போது பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட த.வசந்தகுமார் மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் கல்லூரி அதிபர் கி.நடராஜா, உப அதிபர் கே.தர்மலிங்கம் ஆகியோரை முதலாவது படத்திலும் - விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவரொருவருக்குக் கேடயத்தை பிரதம அதிதியின் பாரியார் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

*(படங்கள்: பஞ்சரத்தினம்)*

## நகர அபிவிருத்தி அதிகாரசபை இடமாற்றம்

யாழ். மாவட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலகம் யாழ். மாநகராட்சி மன்றத்திலிருந்து சோமசுந்தரம் வீதியிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இனி இதன் பணிகள் அங்கிருந்தே இடம்பெறும் என்றும், பொதுமக்கள் தங்கள் தேவைகள் தொடர்பாக அந்த அலுவலகத்துக்கு வரலாம் எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்துள்ளார்.(13)

## ஆலயத்தில் விக்கிரகங்கள் திருட்டு!

கட்டுவன் மேற்கிலுள்ள ஸ்ரீ ஐயப்பசுவாமி கோயிலில் கடந்த 27 ஆம் திகதி இரவு விக்கிரகங்கள் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டுள்ளன. ஆலயத்திலிருந்த பிள்ளையார், முருகன், விஷ்ணு விக்கிரகங்களே திருடப்பட்டுள்ளன.

இவ்விக்கிரகங்கள் அண்மையிலேயே இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தன. ஏற்கனவே இவ்வாலயத்தில் சில மாதங்களுக்கு முன்னர் ஐம்பொன்னாலான விக்கிரகமொன்று திருடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (68)

# 9 வயது மகளின் முன்னால் தந்தை வெட்டிக் கொலை!

## வவுனியாவில் பயங்கரச் சம்பவம்

(வவுனியா நிருபர்)

வவுனியா - எல்லப்பர்மருதங்குளத்தில் ஐந்து பிள்ளைகளின் தந்தையான குடும்பஸ்தர் ஒருவர் கடந்த செவ்வாயன்று கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்டார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

ஐந்து பிள்ளைகளின் தந்தையான இ.ரவிச்சந்திரன் (வயது - 32) என்பவரும், அவரது நண்பரான சந்தானம் தங்கவேலுவும் மதுபோதையில் இருந்தபோது இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து ரவிச்சந்திரனை, சந்தானம் தங்கவேல் தனது இடுப்பில் மறைத்து வைத்திருந்த கத்தியால் தலையில் வெட்டியுள்ளார். இதையடுத்து அவரது தலையில் கல் ஒன்றால் அடித்துக் கொலை செய்தார்.

இச்சம்பவத்தை உயிரிழந்த ரவிச்சந்திரனின் 9 வயது மகள் நேரில் பார்த்துள்ளார். அவர் பொலிஸாரிடம் சாட்சியமளித்ததையிட்டு பொலிஸார் சந்தானம் தங்கவேல் என்பவரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

# யாழ். மாவட்டப் புனரமைப்பு திட்டங்கள் யாவும் தயார்!

## நாளை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

யாழ்.மாவட்டத்தில் இந்த ஆணடு மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புத் திட்டங்கள் தயாராகி விட்டதாகத் தெரிய வருகின்றது.

இவ்விடயம் தொடர்பாக நாளை சனிக்கிழமை யாழ்.செயலகத்தில் நடைபெறவிருக்கின்ற மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தின்போது ஆராயப்படவிருக்கின்றது.

யாழ்.மாவட்டத்தில் - நிக்கொட், யுனிசெப்,யு.என்.எச்.சி.ஆர். மற்றும் திணைக்களங்களின் ஊடாக மேற்கொள்ளப்படவிருக்கின்ற செயற்திட்டங்கள் தொடர்பாகவே இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கின்றது.

இதனைத்தொடர்ந்து, மேற்படி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான இறுதி அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. அங்கீகாரம் கிடைத்ததும் அனைத்துச் செயற்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (க,லி)

# குடாநாட்டு அபிவிருத்திப் பணி; 110 மில்லியன் ரூபா ஒதுக்கீடு!

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற நுண்கருச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இவ்வாண்டு சுமார் 110 மில்லியன் ரூபாவை அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகராலயம் ஒதுக்கியுள்ளது.

இந்நிதி ஒதுக்கீடு முழுவதும் யாழ்.செயலகத்தினூடாக மேற்கொள்ளப்பட இருக்கின்ற நுண்கருச் செயற்திட்டங்களுக்காகவே செலவு செய்யப்படவுள்ளது.

இந்நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படவிருக்கின்ற செயற்திட்டங்களைத் தயாரிப்பதில் யாழ்.செயலகம் ஈடுபட்டுவருகின்றது. மிக விரைவில் இச்செயற்திட்டங்கள் யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (க)

## அபிராமி தாஸ உற்சவவிழா

வண்.வடமேற்கு ஆனைக்கோட்டை திருவருள்மிகு கண்ணகை அம்பாள் தேவஸ்தான தை அமாவாசை அபிராமி தாஸ உற்சவ விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் அம்பிகை அருள் எனும் விடயம் தொடர்பாக முத்தமிழ்மணி கோகலே சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# தொற்றுநோயால் பீடிப்போர் அறிக்கை நாளாந்தம் கொழும்பு செல்கிறது!

## தடுப்பு நடவடிக்கைகளுக்கான ஆய்வுக்காக

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்படுவோரின் விபரங்கள் உடனுக்குடன் தேசிய தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது.

அண்மைக்காலமாக யாழ். மாவட்டத்தில் வைரஸ், டெங்கு, மலேரியா போன்ற தொற்றுநோய்கள் வேகமாகப் பரவி வருகின்றன. இதனால் ஆயிரக்கணக்கான நோயாளிகள் பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

இதனைக் கட்டுப்படுத்துவதற்கு மருத்துவ வட்டாரங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன் ஒரு கட்டமாகவே மேற்படி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் வைரஸ் காய்ச்சல் போன்ற தொற்றுநோய்கள் காரணமாக நோயாளர்கள் அனுமதிக்கப்படுவது தொடர்பான பூரண மருத்துவ அறிக்கைகள் தினசரி தயாரிக்கப்பட்டு தேசிய தொற்றுநோய்த் தடுப்புப்பிரிவுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். போதனா வைத்தியசாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் மேற்கொண்டு வருகின்றார்.

(ச)

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஒன்பதாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் :க.கோபிகா

முகவரி: தபாலக வீதி, சாவகச்சேரி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி:------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்

## இலவசக் கணினி கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் ஆரம்பிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கான கல்வித்திட்டத்தின் கீழ், IIS கணினி நிறுவனத்தின் அனுசரணையுடன் வறிய மாணவர்களுக்கான இலவசக் கணினிக் கற்கைநெறி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், காரைநகர் ஊரிக்காட்டில் மெல்லக் கற்போர் நிலையம் ஆரம்பிக்கப்பட்டு அங்கு தரம் 6 இற்கு உட்பட்ட மெல்லக் கற்கும் மாணவர்களுக்கும் கற்பித்தல் வகுப்புக்கள் நடத்தப்பட்டுவருகின்றது.

(லி)

# நீரிழிவு நோய் DIABETES

பகுதி 5

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### நவீன சாதனங்களின் பயன்பாடும் நீரிழிவின் பெருக்கமும்

அன்று உடல் உழைப்பினாலேயே எல்லா வேலைகளும் செய்யப்பட்டன. மக்கள் அதிகதூரம் நடந்தும் ஈருருளியில் பயணித்தும் தமது அலுவல்களைக் கவனித்தனர். அடுப்பு எரிப்பதற்கு விறகு கொத்தினர். இவற்றினால் அன்றைய மனிதனுக்குப் போதிய உடற்பயிற்சி கிடைத்தது. குருதியிலிருந்த குளுக்கோசு வேலை செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டதால் அது மிகவோ, நீரிழிவு ஏற்படவோ அதிக வாய்ப்பு இருக்கவில்லை. இன்று வாழ்க்கைமுறை வெகுவாக மாறிவிட்டது.

இன்று, சிறு தூரத்திற்குக்கூட மோட்டார் வாகனத்திலேயே செல்கிறோம். தொலைக்காட்சிப் பெட்டியை இயக்கவும், அரைப்பானை இயக்கவும், கேற்றைத் திறக்கவும், கராஜைத் திறக்கவும் இன்னும் பல வேலைகளுக்கும் 'தொலைவியக்கி' (Remote control) ஐப் பயன்படுத்துகிறோம். துணிகளைச் சலவை செய்யவும், தேங்காய் பிழியவும், பழச்சாறு பிழியவும், தானியங்களை அரைக்கவும் இயந்திரங்களைப் பயன்படுத்துகின்றோம். குந்தியிருக்கும் மலகூடத்திற்குப் பதிலாக 'கொமோட்டையும்,' சமையலுக்கு மின்சாரத்தையும் பயன்படுத்துகிறோம். இதனால் நாங்கள் உடல் உழைப்பில் ஈடுபடுவது வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. மென்பானங்களின் நுகர்வாலும் இனிப்பு நிறைந்த உணவுகளின் நுகர்வாலும் குருதியில் மிகுந்திருக்கும் குளுக்கோசைக் கிளைக்கோஜினாக மாற்றத் தேவையான இன்சுலின் உற்பத்தியில் ஈடுபடும் சதையி, மிகையாகத் தொழிற்பட்டு வேலைப்பழுவினால் பழுதடைவதால் இன்று நீரிழிவு நோயாளிகள் மிகுந்துள்ளனர். இதனால் நீரிழிவு நோய் வாழ்க்கை முறை மாற்றம் தொடர்பான நோய் (Life style related disease) எனவும் குறிப்பிடப்படுகிறது.

### சலரோகியின் புண்கள் பற்றிய தப்பெண்ணங்கள்

முற்காலத்திலும் சிலர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு இருந்துள்ளனர். ஆனால் - இந்த நோய், புண்கள் மாறுவதைத் தாமதப்படுத்தும் என்பதை எம் முன்னோர் அறிந்திருக்கவில்லை. புண்கள் ஏற்பட்டு, மாறாது நீடித்தால் அயலவர்கள் செய்வினை - சூனியம் செய்ததால்தான் புண்கள் ஏற்பட்டு மாறாதிருப்பதாக எண்ணிப் போலி மந்திரவாதிகளின் பின்னால் அலைந்தார்கள். சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதிவரை நீடித்த இந்நிலை, மருத்துவத்துறையின் வளர்ச்சியினாலும் கல்வித்தரத்தின் உயர்ச்சியினாலும் இன்று மாற்றப்பட்டுவிட்டது.

### நீரிழிவினால் ஏற்படும் ஆபத்துக்கள்

1) குருதிக்குழாய்கள் பாதிக்கப்படுவதால் நரம்புகளுக்குத் தேவையான போஷணைப் பொருட்கள், நரம்புகளுக்குக் கிடைப்பது குறையும். இதனால் நரம்புகள் பாதிக்கப்பட்டு, தீ, முள், கூரிய ஆயுதங்கள் போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்களை உணரமுடியாதநிலை ஏற்படும். மாரடைப்பு ஏற்படும்போது உணரப்படும் தாங்கமுடியாத வலியைக்கூட உணரமுடியாத நிலையும் ஏற்படலாம். இதனால் மாரடைப்புக்கு உரியகாலத்தில் சிகிச்சை பெறாது மரணம் ஏற்படும் வாய்ப்பும் உண்டு.

தொடரும்...

# மரமுந்திரிகைத் தோட்ட மறைவில் மண் ஆக்கிரமிக்கப்பட்ட வரலாறு!

தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களில் அபிவிருத்தி என்ற போர்வையில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றங்களும், இவற்றினால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களும், அவர்கள் அடைந்த சொல்லொணாத் துயரங்களும் கணக்கிலடங்காதவை.

இந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் கொண்டச்சி என்ற இடத்தில் மிக இரகசியமான முறையில் திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப்பட்ட 'தம்பப்பன்னி' அல்லது 'கஜுவத்தை' எனப்படுகின்ற சிங்களக் குடியேற்றத்திட்டம் பற்றி எம்மில் பலருக்குத் தெரியாமலிருக்கலாம். இக்குடியேற்றத்திட்டத்தின் பின்னணி பற்றியும், அதன் இன்றையநிலை பற்றியும் இக்கட்டுரை ஆராய்கிறது.

இலங்கையில் சிங்களப் பேரினவாதிகள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், தமிழ் மக்கள் மீது சிங்கள ஆட்சியாளர்களால் திட்டமிடப்பட்டு மேற்கொண்டு வந்த பல்வேறு 'மோசடி'த்தனமான நடவடிக்கைகளில் மிகப் பாரதூரமான நடவடிக்கையாக அமைந்தவை - தமிழர் பாரம்பரியப் பிரதேசங்களைப் பறித்தெடுக்க மேற்கொள்ளப்பட்ட (சிங்களக்) குடியேற்றத்திட்டங்களாகும்.

வேலைவாய்ப்பு, விவசாய அபிவிருத்தி என்ற போர்வையில் இவ்வாறான குடியேற்றத் திட்டங்களை அமைக்க முதன்முதலில் குறிவைத்த பகுதி கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டமாகும்.

இமமாவட்டத்தில் கல்லோயாவும், திருமலை மாவட்டத்தின் கந்தளாயும் இதற்குத் தக்கசான்றுகளாகும்.

இதனமூலம் கிழக்கு மாகாணத்தில் தமிழர் இன விகிதாசாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிப் போக்கு சகிக்க முடியாததாகும்.

காலப்போக்கில் கிழக்கில் வைத்த குறிபோன்று, வடமாகாணத்திலும், எல்லையோர மாவட்டங்களிலும் முடுக்கிவிடப்பட்டது. முல்லைத்தீவில் வடக்கையும் - கிழக்கையும் துண்டாட ஏற்படுத்திய 'வெலி ஓயா'வும், வவுனியா தென் எல்லையில் மேற்கொண்ட பாவற்குளமும், என்ற வரிசையில் மன்னார் மாவட்டத்தின் தென் எலலையோரத்தில் இரகசியமாக உருவாக்கப்பட்ட கொண்டச்சி- 'கஜுவத்தை' அல்லது 'தம்பப்பன்னி' எனப்படுகின்ற சிங்களக் குடியேற்றத் திட்டமும் முக்கியமானவை.

### கொண்டச்சியில் 'தம்பப்பன்னி' குடியேற்றத் திட்டம்




தம்பப்பன்னி எனப்படுவது முதன் முதலில் விஜயன் இலங்கையில் வந்து இறங்கிய இடம் எனக் குறிப்பிடப்படுகிறது. இது புத்தளம் மாவட்டத்தில் உள்ளது.

**'தம்பப்பன்னி' - அமைவிடம்**

கொண்டச்சி மரமுந்திரிகைப் பண்ணையில் அமையப்பெற்ற 'தம்பப்பன்னி' அல்லது 'கஜுவத்தை' எனப்படுகின்ற சிங்களக் குடியேற்றமானது மன்னார் மாவட்டத்தின் தென் எல்லைப் பகுதியில் உள்ள முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ளது.

வில்பத்து சரணாலயத்தின் வடபுறமாக அமைந்துள்ள இந்தக் குடியிருப்பு, அனுராதபுரம் - மன்னார் மாவட்ட எல்லையோரமாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் மக்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட இந்த முசலிப் பகுதி, குறைவான சனத்தொகையைக் கொண்டதாகும். இந்தச் சிங்களக் குடியேற்றப்பகுதி முற்றிலும் மனித சஞ்சாரமற்ற காட்டுபபகுதி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மன்னார்ப் பகுதியில் பல இடங்கள் மரமுந்திரிகைச் செய்கைக்கு வாய்ப்பாக இருந்தபோதிலும், இந்தக் குறிப்பிட்ட 'தம்பப்பன்னி'யின் இடஅமைவு, ஸ்ரீலங்கா அரசின் நிலம் பறிக்கும் மோசடி வேலைக்கு வாயப்பானதாகவே அமைந்திருந்தது. அனுராதபுரத்தின் வடமேல் எல்லையிலிருந்து ஏறத்தாழ 22 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இப்பண்ணை சுமார் 6000 ஏக்கர் பரப்பளவைக் கொண்டதாகும்.

**குடியேற்றத்தின் பின்னணி**

மன்னார் மாவட்டமானது கால நிலை அடிப்படையில் ஒரு வரண்ட பிரதேசமாகக் காணப்படுகின்றபோதிலும், விவசாய விருத்திக்கும் பொருத்தமான மண்வளமிக்க ஒரு பகுதியாக விளங்குகின்றது.

கட்டுக்கரைக்குள நீர்ப்பாசனத்தின் உதவியுடன் நெற்செய்கை பரந்த நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நீர்ப்பாசன வசதியில்லாத சில பகுதிகளில் மரமுந்திரிகை பயிரிடுவதற்கான புவியியற் பின்னணியைக்கொண்டு காணப்படுகின்றது.

குறிப்பாக மன்னார்த்தீவில் தோட்டவெளி, தாராபுரம், பேசாலை, தலைமனனார், எருக்கலம்பிட்டி ஆகிய பகுதிகளைச் சார்ந்துள்ள மணற்பாங்கான பகுதிகளிலும், முசலிப் பிரிவில் கொண்டச்சி, சிலாவத்துறையும் மற்றும் மடுப்பிரதேசம், வடக்கில் முழங்காவில் ஆகிய பகுதிகளும் இப்பயிர்ச் செய்கைக்கு வாய்ப்பானவையாக விளங்குகின்றன.

இதனால், இப்பிரதேசங்களில் மரமுந்திரிகைச் செய்கை ஊக்குவிப்பது என்ற போர்வையில், குறித்த சில பகுதிகள் பிரதானமாகத் தெரிவு செய்யப்பட்டன. இவற்றுள் மடு மற்றும் கொண்டச்சி, முழங்காவில் என்பன முக்கியமானவை. முழங்காவில் மன்னாரின் வடபுற எல்லையில் அமைந்திருந்தமையினால் இரகசிய சிங்களக் குடியேற்றம் ஏற்படுவதற்கு வாய்ப்பில்லாமல் போனது.

எனினும், கொண்டச்சி மற்றும் மடு - றோட் பகுதிகளானது வவுனியா தென்மேற்கு, அனுராதபுரம் வடமேற்கு எல்லைகளையண்டிய பகுதிகளாகவும், மக்கள் குடியிருப்புக்களற்ற அடர்ந்த காட்டுப் பகுதியாகவும் இருந்தமையினால், இப்பகுதிகள் திட்டமிட்ட முறையில் மரமுந்திரிகைப் பண்ணை விஸ்தரிப்பு என்ற போர்வையில் சிங்கள மக்கள் குடியேற்றப் பகுதிகளாக மாற்றப்படலாயின.

1972 இல் மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் ஏற்படுத்தப்பட்டு, மன்னாரில் உள்ள 6000 ஏக்கர் பரப்புள்ள மரமுந்திரிகைப் பண்ணை சுவகரிக்கப்பட்டது.

கொண்டச்சிப் பண்ணையில் 6,000 ஏக்கர் நிலப்பரப்பில் 92,000 மரங்கள் நாட்டப்பட்டன.

கலாநிதி.ஏ.எஸ்.சூசை ஆனந்தன்
விரிவுரையாளர்,
புவியியற்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(நாளை தொடரும்)

# சமூக அநீதிகள், அழுத்தங்களை வெளிப்படுத்தும் ஊடகமே இலக்கியம்

**வலிகாமம் வலய உதவிக் கல்விப் பணிப்பாளரும் பிரபல எழுத்தாளருமான திருமதி கோகிலா மகேந்திரனுடனான நேர்காணல்.**

*கேள்வி:-* எழுத்துலகிற்குள் நீங்கள் பிரவேசிப்பதற்கு உந்துசக்தியாக அமைந்தவை எவை?

*பதில்:-* எழுத்துலகிற்குள் பிரவேசிப்பதற்கு எழுத்தூற்றல் மிகவும் வேண்டப்பட்ட ஒன்று. அதற்கு குடும்பச்சூழல் மற்றும் பாடசாலைச் சூழல் என்பன சிறப்பாக அமைய வேண்டும். என்னைப் பொறுத்தளவில் எனக்கு இவையிரண்டும் வலிமையாக இருந்தன. எமது ஊரில் அதாவது தெல்லிப்பளையிலுள்ள விழிசிட்டி என்ற கிராமத்தில் நிறையப் பண்டிதர்கள், புராணப்படிப்பில்



ஈடுபடுவோர் மற்றும் பண்ணிசையாளர்கள் இருந்தார்கள். அந்த ஊரில் நானும் வாழ்ந்ததால் எனக்கும் அந்த வாசனை இயல்பாகவே ஏற்பட்டது. எனது தந்தையார் தமிழ் ஆசிரியராகவும், அதிபராகவும் இருந்தமையும் ஒரு காரணம்.

மகாஜனாக் கல்லூரி தந்த தமிழறிவும், ஆசிரியர் சமூகத்தின் உதவியும், குறிப்பாக கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை அவர்களிடமிருந்து பெற்ற கலைத்திறன் என்னைப் போன்ற பலரை எழுதத் தூண்டியது. 9 ஆம், 10 ஆம் வகுப்புக்களிலேயே நான் சிறுகதைகளை எழுத ஆரம்பித்தேன். அதன் தொடர்ச்சியான வளர்ச்சியே இன்று என்னையொரு சிறுகதையாளராகப் பரிணமிக்கச் செய்துள்ளது.

*கேள்வி:-* உங்களுடைய சிறுகதைகளின் உள்ளடக்கங்கள் எதனைப் பின்னணியாகக் கொண்டமைந்துள்ளன?

*பதில்:-* குறிப்பாக ஒரு கருப்பொருள் என்று சொல்ல முடியாது.

பொதுவாக எல்லா எழுத்தாளர்களும் கூறுவது போல சமூகத்திலேயே நடக்கின்ற பிரச்சினைகள் எங்களுடைய உணர்வுகளைத் தூண்டும் போது- அதிலும் குறிப்பாக எமக்குக் கோபத்தை ஏற்படுத்துகின்ற போது, சமூக அநீதிகள் மற்றும் மனதை அழுத்தும் சம்பவங்கள் எமது மனதில் மறையான உணர்வுகளைத் தோற்றுவிக்கும் போது- அதனை வெளிப்படுத்துகின்ற ஒரு ஊடகமாகத்தான் நாங்கள் இலக்கியங்களைக் கொள்கிறோம். அதனை வேறொரு வழியாக வெளிப்படுத்துவதை விட, அதாவது ஒரு வன்முறையாக அல்லது மற்றவர்களை புண்படுத்தும் வகையில் வெளிப்படுததுவதை விட ஒரு இலக்கியமாக வெளிபடுத்துகின்றபோது வெளிப்படுத்துகின்றவருக்கும் திருப்தி ஏற்படுகின்றது. அதே வேளை சமூகத்திற்கும் ஒரு கலை இலக்கியம் கிடைக்கப் பெறும்போது அது சமூக வழிகாட்டியாகவும் அமைகின்றது.

அந்த வகையில் பார்க்கப் போனால் இன ஒடுக்குமுறை, பெண்ணியம் சார்ந்த பிரச்சினைகள் மற்றும் சமூகப் பிரச்சினைகள் போன்றவை என் கண்ணில் பதிகின்ற போது- அவற்றையெல்லாம் எனது படைபபு இலக்கியங்களுக்குள் கொண்டு சென்று எழுத்துருவாக்கியுள்ளேன். நேற்று முன்தினம் கூட ஒரு சிறுகதை எழுதினேன். அது மினிபஸ் பயணத்தின்போது ஏற்படுகின்ற சிரமங்கள், குறிப்பாக நடத்துநரால் பயணிகளுக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்களை கருப்பொருளாக்கி அக்கதையை நகர்த்தியுள்ளேன்.

*கேள்வி:-* தென்னிந்தியாவில் இருந்து வெளிவருகின்ற சிறுகதைகள் , நாவல்களிலிருந்து எமது ஈழத்து இலக்கியங்கள் எந்த வகையில் வேறுபடுகின்றன ?

பதில்: இதை இரண்டு வகையில் நாங்கள் பார்க்கலாம். தென்னிந்தியாவிலிருந்து வெளிவருகின்ற சிறுகதைகள், நாவல்களில் சில- அதாவது குறிப்பிட்ட எண்ணிக்கைக்கு உட்பட்டவற்றின் தரத்திற்குச் சமமாக எமது கதைகள் வளர்ச்சியடையவில்லை. உதாரணமாக 'அம்பை' அவர்கள் பெண்களுடைய பிரச்சினைகள் பற்றி எழுதுகின்ற தரத்துக்கு எமது கதைகள் வளர்ச்சி பெறவில்லை என்று கூறலாம்.

அதேநேரம்- மறுபக்கம் பார்த்தால் தென்னிந்தியாவிலிருந்து வெளிவருகின்ற வியாபாரக் குப்பைகள் மற்றும் வெறும் பண நோக்கத்துக்காக எழுதப்படுகின்ற கருவற்ற கதைகள் மாதிரி எமது ஈழத்தில் வெளியாகுவது குறைவு. எமது நாட்டுக் கதைகள் அதிகமான உச்சத்தை தொடாது விட்டாலும் பொரும்பாலான கதைகள் சமூகச்சீர்திருத்தத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் அமைகின்றன. இருந்தாலும் இன்னும் முன்னேற வேண்டிய நிலையும் தேவையும் இருக்கின்றது.

*கேள்வி:-* தற்கால இளம் எழுத்தாளர்களின் எழுத்துலகப் பிரவேசம் பற்றி..?

*பதில்:* எமது பிரதேசத்தில் தற்போது உருவாகிக் கொண்டிருக்கின்ற இளம் எழுத்தாளர்களிடம் ஒரு வீச்சு அதாவது - உணர்வு வலிமை காணப்படுவதை நாங்கள் பார்க்கிறோம். அது நல்லதுதான். இருந்தாலும் இளைஞர்கள் எழுத்தாளர்களாக வருகின்ற எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. எங்களுடைய காலங்களில் இளைஞர்கள் உள்வந்தது போல இந்தக் காலத்தில் இல்லை. அப்படி எழுதுகின்றவர்களில் சிலர் நாட்டினுடைய சூழலுக்கு ஏற்றமாதிரி உணர்வு வலிமையோடு எழுதுகின்றார்கள். என்றாலும் அவர்கள் இன்றும் சமகாலப் போக்கை அவதானித்து சிறுகதைத் துறையில் என்னென்ன உத்திகள் அல்லது என்னென்ன கொள்கைகள் கடைப்பிடிக்கபடுகின்றன. வரன் முறைகளுக்கு உள்ளே நின்றும், அதற்கு வெளியே நின்றும் என்னென்ன மாதிரியெல்லாம் எழுதலாம் என்பதைப் படித்து அல்லது வாசித்துக் கொண்டு எழுதுவார்களாக இருந்தால் இன்னும் சிறப்பாக எழுதுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

*கேள்வி:-* எழுத்தாளனுடைய சொந்த வாழ்வு, ஆளுமை என்பன அவர்களது இலக்கியத் துறைப் பிரவேசத்திற்குள் எந்தளவு முக்கியமானது?

*பதில்:* இது பற்றித் அண்மையில் நடந்த கருத்தரங்கு ஒன்றின் போதுகூட மிகவும் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. எழுத்தாளனும் ஒரு சாதாரண மனிதன்தான், அவனிடத்திலும் பலங்கள், பலவீனங்கள் இருக்கலாம்.

எழுத்தாளனும் ஒரு சாதாரணமனிதன் தான். அவன் வானத்திலிருந்து பூமிக்கு வரவில்லை. அவனிடத்திலும் பலவீனங்கள், உணர்வுசமநிலைக் குறைவு என்பன இருக்கும் என்பது உண்மை. ஆனால், ஒரு எழுத்தாளன்- நான் சமூகத்திற்கு நல்ல விடயங்களைச் சொல்லப போகிறேன் என்று எழுதத் தொடங்கிய பின்னர் அவனிடம் ஒரு வளர்ச்சி காணப்பட வேண்டும். அந்த வளர்ச்சி இலக்கியம் சார்ந்ததாக மட்டுமன்றி அவனுடைய சொந்த ஆளுமையிலும் இருக்கவேண்டும். எழுதத் தொடங்கும் போது இருக்கின்ற பலவீனங்கள் எழுத்துலக வளர்ச்சியின் போது குறைந்துவிட வேண்டும். மற்றவர்களுக்கு நான் நல்லதைச் சொல்ல வருகின்றேன் என்று முனையும்போது நல்ல ஆளுமையுடையவராகத் தன்னை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாது விட்டால் அவரது கருத்துக்கள் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது போய்விடுகின்றன. அப்போது அவரது தகுதியும் குறைந்து விடுகிறது. ஆகவே- அவர் இலக்கியத்துறைக்குள் வரும்போது இந்த வளர்ச்சிக்கு ஆயத்தமாக வரவேண்டும்.

*கேள்வி:-* இலக்கிய ஆய்வரங்கு மற்றும் கருத்தரங்குகளில் பெண்களின் பங்களிப்பு ஏன் குறைவாக இருக்கிறது?

*பதில்:-* இலக்கியக் கருத்தரங்குகளில் பெண்கள் பங்கு பற்றுவது குறைவு. அப்படிப் பங்குபற்றினாலும் பெண்கள் பேச்சாளர்களாக இருப்பதில்லை.

இது அவர்களுடைய சிறுவயதிலான தற்துணிவு, ஆளுமை என்பவற்றில் இருந்தே வளர்க்கப்பட வேண்டும். ஒரு பெண் வளர்ந்து வருகின்றபோது தன்னுடைய கருத்தைச் சுயாதீனமாகச் சொல்லும் போது அவள் பாராட்டப்படுவதில்லை. ஆண்கள் மத்தியில் நின்று தனது கருத்தை எடுத்துச் சொல்லும்போது அவள் அடக்கப்படுகிறாள். இதனால் அவளுடைய சுதந்திரமான கருத்து வெளிப்பாடுகள் முடக்கப்பட்டுப் போய்விடுகின்றன.

பரந்திருக்கின்ற இந்த உலகத்திலே, சரி அரைவாசிப்பகுதி பெண்கள். இப்படிப் பெண்களின் விகிதாசார அமைப்பு இருக்கின்றபோது அவளது பங்களிப்பு எந்தத்துறையில் கிடைக்காது விட்டாலும் அது முழுமை பெறாது. அதே போன்றுதான் அவளது கருத்துக்களும் ஏற்றுக் கொள்ளப்படாது விட்டால் சமூக வளர்ச்சி முழுமை பெறாது.

இவற்றை நாங்கள் சரியான முறையில் வளர்த்தெடுக்க வேண்டுமென்றால் சிறு வயதிலேயே அவள் வெளிப்படுத்துகின்ற கருத்துக்களை ஊக்கப்படுத்த வேண்டும். இவ்வாறு வெளிப்படுத்தும்போது ஆண், பெண் வேறுபாடின்றி அவர்கள் பாராட்டப்பட வேண்டும்.

இன்னொருவகையில் சொன்னால் பெண்கள் வளரும் குடும்பச்சூழலும், கல்விச் சூழலும் செம்மையாக்கப்படவேண்டும்.

*கேள்வி:-* நீங்கள் எழுத்துத் துறையில் இதுவரை பெற்ற பரிசுகள், விருதுகள் பற்றி...?

*பதில்:-* எனக்கு கிடைத்த விருதுகளும் பரிசுகளும் என்னை மிகவும் ஊக்குவித்த விடயங்கள். குறிப்பாக 1986 இல் எனது 'பிரசவங்கள்' சிறுகதைத் தொகுதியும் 1997 இல் 'வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம்' தொகுதியும் தேசிய சாகித்தியப் பரிசுகளையும் வென்றன. 1986 இல் அப் பரிசுகளுடன் இலக்கிய வித்தகர் பட்டமும் வழங்கப்பட்டது.

வாழ்வு ஒரு வலைப்பந்தாட்டம் தொகுதி வடக்கு- கிழக்கு கல்வி, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் சாகித்திய விருதையும் பெற்றது.

பரிசுகள் பல கிடைத்திருந்தாலும் 1989 இல் நோர்வே தமிழ்ச் சங்கம் நடத்திய சிறுகதைப் போட்டியில் உலகளாவில ரீதியில் கிடைத்த முதற்பரிசு பெறுமதியானது. 'முகங்களும் மூடிகளும்' என்ற கதைக்கு அப்பரிசு கிடைத்தது.




**சந்திப்பு: கலானந்தி, உஷா**

## அன்பின் சிந்திக்கு

### மனந் திறக்கும் ஒரு மடல்





*சிந்தி,*

உனது சென்ற கடிதத்தில் எமது தோழி நேசமலரின் மகள் ஜேர்மனி ன்றுவிட்டாளா? என விசாரித்திருந்தாய்,

சுமார் ஒரு வருடம் எட்டுமாதங்களின் பின் அவள் ஜேர்மனிக்குச் சென்று சேர்ந்துவிட்டாள். நேசமலர் கொழும்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமாக அலைந்த அலைச்சலுக்கும் அவளது மனநிம்மதியின்மைக்கும் முடிவுவந்துவிட்டதாக நான் நினைத்தது தவறாகப் போய்விட்டது.

மகள் சென்றதும் மருமகனுடன் சேர்ந்து ஆனந்த வாழ்க்கை நடத்துவதாதகச் செய்திவருமென நேசமலர் ஆவலோடு எதிர்பார்த்தாள். ஆனால், போய் மூன்று, நான்கு மாதங்களில் மகளின் கண்ணீர்க் கதைதான் வரத்தொடங்கியது.

நேசமலர் தேர்ந்தெடுத்த மருமகன் சிவராமனை உனக்கும் தெரிந்திருக்கும். பத்து, பதினைந்து வருடங்களுக்கு முன் அவன் பாடசாலை முடியும் நேரங்களில் மாணவிகளின் வரவை எதிர்பார்த்து வீதியில் தவமிருப்பான். அவர்களைக் கண்டதும் தன்னை ஹீரோவாகக் கருதிக்கொண்டு அவன் பேசும் பேச்சுக்களும் கிண்டல்களும் சகிக்க முடியாதவையாக இருக்கும்.

சாதாரண தரத்திலே கூடச் சித்தியடைய முடியாத அவனை வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டார்கள்.

நேசமலர் இவனைத் தேர்ந்தெடுத்தபோதே நான் பழையவற்றை நினைவூட்டினேன். அவளும் மாப்பிள்ளை தேடப்படும் பாட்டையும் சீதனத்தின் உச்சநிலையையும் சுட்டிக் காட்டி அவனை மருமகனாகத் தீர்மானித்தாள்.

வெளிநாட்டுக்கு, அதுவும் மேலைத் தேசத்திற்கு நம்மவர்களைத் திருத்தும் திறமை இருப்பதாகக் கருதுவது தவறென்பது எம்மில் எவருக்குமே புரிவதில்லையே.

அங்கிருப்பவர்கள் அத்தேச கலாசாரத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பிக்கிறார்கள். இங்கேயே பண்பு தவறிநடப்போர் அதற்கு அங்கீகாரம் பெற அக்கலாசாரத்தைப் பயன்படுத்துகிறார்கள் என்றே கருதவேண்டியிருக்கிறது.

நமது மறக்கும் தன்மையும் வெளிநாட்டிலிருப்போரின் மறைக்கும் திறமையும் நேசமலர் போன்றோர் வேதனைகளை விலைக்கு வாங்க வைத்துவிடுகிறது. ஆம், சிவராமன் இங்கு எப்படியிருந்தானென்பதை நாம் மறந்துவிட்டோம். அங்கிருப்போர் தாங்கள் ஓகோ என்று வாழ்வதாகக் காட்டிக்கொள்கிறார்கள்.

சில நவீன வசதிகள் அங்கிருக்கலாம் மறுக்கவில்லை. ஆனால் நமது மண்ணின் மகிழ்வான வாழ்வும் சிறந்த கலாசாரமும் அங்கு கிடைக்காதென்பது எமக்குப் புரிவதில்லையே.

இங்கேயே ஒரு மேலைத்தேசத்தவனைக் கண்டால் காலில் விழவேண்டுமென்னும் அடிமை மனப்பான்மை எமக்கிருக்கிறது. அங்கு போனதும் காந்திஜியாக மாறிவிடுவோமோ என்ன?

சிவராமன், இரண்டு விவாகரத்துக்களின் பின் திருமணம் செய்து கொண்ட நேசமலரின் மகளையும் விவாகரத்துச் செய்ய முடிவுசெய்து விட்டானாம். இதுவரை கூட போதையில் வாழும் அவனுடன் பெரும் வேதனையுடன் அவள் காலங்கழித்திருக்கிறாள்.

திருமணச் சந்தையில் மாப்பிள்ளை விலை உயர்வு என்பதற்காக இப்படி ஒரு திருமணம் செய்து வேதனைப்பட்டு மீண்டும் தனியாக வாழ ஆரம்பிப்பதில் என்ன பயன்?

சிந்தி, இது நாம் சிந்திக்க வேண்டிய விடயம்.

அன்புடன்,
யோசி.

# துணியில் பூச் செய்வது எப்படி? OXIDAISY

### தேவையான பொருட்கள்

பப்பிளின் துணி- 1/2m வெள்ளை, பச்சை
வூல் நூல்- மஞ்சள்
மெழுகுதிரி
துடைக்கும் துண்டு
றூள்- பெரியது, நடுத்தரமானது

### செய்முறை



oxidaisy பூ செய்வதாயின் 1/2m பப்பிளின் வெள்ளைத்துணிக்கு கஞ்சியிடவும். கஞ்சியிட்ட துணியில் இதழின் cutting ஐ வெட்டிஎடுக்கவும். இதழின் நடுப்பகுதியை சிறிதளவு வட்டமாக வெட்டி எடுக்கவும். பின்னர் இதழுக்கு நடுத்தர றூளை சூடாக்கி, துடைக்கும் துண்டினால் ஒவ்வொரு இதழின் மேலும் றூள் பண்ணவும். பின் பெரிய றூளினால் மறுபக்கத்தினை றூள் பண்ணவும். பச்சைத்துணியில் பூவின் புல்லிக் cutting ஐ வைத்து வெட்டி எடுத்து றூள் பண்ணவும். அதன் மஞ்சள் நிறவூல் நூலினால் கை இரு விரலில் 40 முறை சுற்றிக் கட்டுக் கம்பியில் வைத்து முறுக்கி வெட்டி எடுக்கவும். அதனை நடுவில் வைத்து மூன்று இதழ்களையும் ஒவ்வொன்றாக ஒட்டி இறுதியாகப் புல்லியையும் ஒட்டியபின் கட்டுக் கம்பிக்கு flower tape சுற்றவும். இவ்வாறே சிறிய இதழில் மொட்டும் செய்தல் வேண்டும். இலையிற்கு பச்சைத்துணியில் cutting ஐ வைத்து வெட்டி கட்டுக்கம்பியில் இலையினை வைத்துக் கட்டி கட்டுக்கம்பிக்கு flower tape சுற்றவும். இலையினை கைக்குட்டை வைத்து றூள் பண்ணவும். இறுதியாக மொட்டு, பூ, இலை ஆகியவற்றை ஒரு ஒழுங்கு முறையில் ஒழுங்குபடுத்தி அழகான செண்டினைப் பெறலாம்.

# கைகளிலும், கால்களிலும்



# அலங்காரமாகப் பூசப்படும் மேஹண்டி Mehandi

மேஹண்டி எனப்படும் அலங்காரம் பாரம்பரியமாக இந்தியாவிலும், மத்திய கிழக்கு நாடுகளிலும் பிரபல்யமாக இருந்தது. இது ஒரு அலங்காரமாக மட்டுமன்றி உஷ்ணகாலங்களில் உடலை குளிர்ச்சியாகப் பேணுவதற்காகவும் இதைப் போட்டுக்கொள்வதுண்டு. ஆனால்- தற்காலத்தில் பல நாடுகளிலும் இது ஒரு அழகுக்கலையாக வளர்ந்து வருகின்றது. அந்த வகையில், இலங்கையிலும் மணப்பெண்களுக்கு இது ஒரு அலங்காரமாகச் செய்யப்படுவதுண்டு. எனவே, இதைப்பற்றி நம் பெண்கள்அறிவதில் ஆர்வம் காட்டுவதில் ஐயமில்லை. மேஹண்டி எனப்படும் அலங்காரத்திற்கு மருதாணி இலைகளை பயன்படுத்துவார்கள். மருதாணி இலைகளை நன்றாகக் காயவைத்து நல்ல Powderஆகப் பொடி செய்து எடுக்கவும். பின் இதனை ஒரு நைலோன் துணியில் போட்டு இருமுறை அரித்தெடுக்கவும். பின் இவ்வாறு அரித்தெடுத்த Powder ஐ தேயிலைச்சாயம், தேசிப்புளி கலந்து சிறிது கறுவாத் தைலமும் சேர்த்து 8-10 மணி நேரம் வரை ஊறவிடவும். இக்கலவையை கோன் போன்ற பைகளில் போட்டு அலங்காரமாக கைகளில் போட்டுக் கொள்ளலாம். அல்லது மெல்லிய சிறிய குச்சி மூலமாகவும் போட்டுக் கொள்ளலாம். இவ்வாறு போட்டுக் கொண்ட கலவையை 2-3 மணிநேரம் காயவிடவும். லேசாக காய்ந்து வரும்போது சிறிது சீனி சேர்த்து, தேசிப்புளிச் சாற்றை பஞ்சினால் தோய்த்து இடைக்கிடை நனைத்துக் கொள்ளவும். பின் நன்றாகக் காய்ந்ததும் போட்டுக் கொண்ட கலவையை கரண்டி விட்டு, சிறிது நேரத்திற்குக் கையை நனைக்காமல் வைத்துக் கொள்ளவும். நேரம் போகப் போக, நிறம் கூடிக்கொண்டு போகும். மேஹண்டி கலவையை வீடுகளில் தயாரிக்க வசதியற்றவர்கள், தயாரிக்கப்பட்ட மேஹண்டிக் கலவைக் கோன்கள் கடைகளில் விற்கப்படுகின்றன. இதனை வாங்கிக் கைகளில் அலங்காரமாகப் போட்டு கொள்ளலாம். கைளில் அலங்காரமாக மேஹண்டி போட பழக்கமற்றவர்கள், கைகளைப்போன்று வடிவமைக்கப்பட்ட காகித அச்சுக்களை வாங்கி கைகளில் போட்டுக் கொள்ளலாம். மேஹண்டிக் கோன்களை வீடுகளில் செய்ய விரும்புவோர் பால்மா பெட்டிகளில் வரும் ஈய பக்கட்டுக்களை கோன் செய்வதற்கு பயன்படுத்தலாம். இப்படி அழகாகச் செய்யப்படும் மேஹண்டி அலங்காரமானது மணப்பெண்களை அழகுதேவதைகளாக காட்சியளிக்கச் செய்யும்.

திருமதி யோகினி சண்முகநாதன்

# வழக்காறுகள் என்னும் பெயரால் பிள்ளைகளுக்கு வரம்பிடலாமா..?

## வாழ்வில் வளர்ச்சி நிலைகள் அறிதலும் புரிந்து கொள்வதும்

(சென்றவாரத் தொடர்ச்சி)

சுகமில்லாத நேரத்திலும் என்னை வேலை செய்யச் சொல்கிறார்களே என்று எண்ணினாள். இங்கு மனதிலே வந்த மோதல், குழப்பம், சரீரத் தாக்கமாக மாறியது. மயக்கம் போட்டு விழும் நிலைக்கு வந்தது. சிலவேளைகளில் இதைக் கிஸ்ரீறியா என நாம் அழைக்கிறோம். இது சரீர நோயல்ல. சரீர நோயில் இருக்கும் அடையாளங்கள் வெளிப்படும் மனச்சிக்கலே. ஆகவே இந்தப் பெண்ணுக்கு மனப் பிரச்சினையே ஏற்பட்டது.



சுகயீனமான நாட்களில் வேலை செய்வது கூடாது என மனதில் பதிந்திருந்தது. இதை மற்றவருக்குக் கூறவும் முடியாத நிலையிலிருந்தாள். பெற்றோர் தாம் அறியாமல் செய்யும் பிழையால் சாதாரணமான உடலில் நடக்கும் நல்ல நிகழ்ச்சி நோயாக அறிமுகப்படுத்தப்படுகிறது.

எமது தமிழ், சிங்களக் கலாசாரத்தில் பிள்ளை பூப்படைந்தவுடன் சில பழக்கவழக்கங்கள் உள்ளன. சில பழக்கவழக்கங்களால் பிள்ளை பயப்படுகிறது. நோய் என்று அறிமுப்படுத்தாதிருந்தாலும் செய்யும் செயல்களால் இது இயற்கையான ஒன்றல்ல, ஏதோ ஒன்று என்று மனப்பயம் ஏற்படுகின்றது.

பிள்ளை பூப்படைந்ததும் சில குடும்பங்களில் அப் பிள்ளையைப் புறம்பாக்குவர். ஒரு அறையில் சில நாட்கள் இருக்கும்படி கூறுவர். ஆண்களைக் காட்டுவதும் இல்லை. தந்தையைக் கூடக் காட்ட மாட்டார்கள். இப்படிச் செயற்படும் போது பிள்ளை மனதில் எனக்கு ஏதோ புதுமையான ஒன்று நடந்துவிட்டது என்று எண்ணுகிறது. இது ஒருபோதும் நடக்காத ஒன்று என்று எண்ணுகிறது. இந்த எண்ணம் ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் வரும்போதும் கீழ்மனதில் இருக்கும். இது நடக்கவேண்டிய ஒன்றல்ல. ஒரு பெண்ணுக்கு வேறு நோய் ஒன்றும் இல்லாதிருந்தால், பூப்படைந்து விட்டாள் என்பதற்காக அறையில் புறம்பாக இருக்க விட வேண்டிய அவசியமில்லை. ஒரு தாய் கூறினாள் தனது மகளுக்கு "இப்படிப்பட்ட சடங்கொன்றும் செய்யவில்லை. இதைச் செய்யாது விட்டதனால் மகளின் ஒரு குறைபாடும் இருக்கவில்லை" என்று.

ஆகவே, இதைப்பற்றி எந்தவிதமான பயமும் ஏற்படத் தேவையில்லை. அணிய வேண்டிய உடை பற்றிச் சொல்லிக் கொடுக்க வேண்டுமே தவிர பயப்படுத்தி அறையில் புறம்பாககி வைப்பது நல்லதல்ல. அதே போன்று சில உணவுகளை பிள்ளைக்குக் கொடுக்காது ஒதுக்குகிறோம். சிங்கள மக்களில் மாதவிடாய் காலத்தில் எண்ணைய்ச் சாப்பாடுகளைக் கொடுப்பதில்லை. ஆனால் தமிழ் மக்கள் நல்லெண்ணெய் குடிக்கக் கொடுப்பர். அல்லது உணவோடு கலந்து கொடுப்பர். ஆகவே, எண்ணெய் சேர்ந்த உணவைக் கொடுபபது கூடாது என்று சிங்கள மக்களுக்கு இருக்கும் பயம் அர்த்தமற்றது. செமிக்கக் கூடிய உணவுகளைக் கொடுப்பது நல்லது.

ஆகவே, பயப்படுத்தக்கூடிய எந்த பழக்கவழக்கத்தையும் கைவிடுவது நன்று. அது மட்டுமல்ல பெற்றோருக்கு சில பயங்கள் இக்காலத்தில் வரலாம். பிள்ளைக்குக் குளிப்பாட்டுவது யார்? எந்தப் பக்கம் பார்த்துக் குளிப்பாட்டுவது? என்ற பிரச்சினை எழலாம். இதனால் சாஸ்திரக்காரரிடம் சென்று ஆலோசனை கேட்பர். பெற்றோர் இதைச் செய்வது பயத்தினாலேயே. யார் பிள்ளையைக் குளிப்பாட்டுவது என்ற பயமும் வரும். இந்த வயதுப் பிள்ளை தனியாகக் குளித்து முழுகத் தெரிந்திருக்கும். முழுக்காட்டுவது யார் என்று பெற்றோர் பயப்படத் தேவையில்லை. மேலும் மாதவிடாய் வந்ததும் குளிக்கக் கூடாது என எண்ணுவர். இது இயற்கையான நிகழ்ச்சி. நோயல்ல. ஆகவே குளிக்காமல் இருக்கத் தேவையில்லை. உடல் நோயேதும் இல்லையேல் குளிக்கலாம்.

ஆதிகாலத்தில் இப்பழக்கவழக்கங்கள் ஏற்பட்டது பிள்ளையின் பாதுகாப்பைக் கருதியே. ஆதியில் விஞ்ஞானக் குறிப்புக்கள் தெரியாது. ஆனால் இன்று விஞ்ஞானம் வளர்ந்துவரும் யுகத்திலேயே வாழ்கிறோம். சில பழக்கவழக்கங்கள் அர்த்தமுள்ளவை. பிள்ளையைப் பெற்றோர் பயப்படுத்தாத, ஊக்குவிப்பை ஏற்படுத்தக்கூடிய பழக்கவழக்கங்கள் நன்று. தமிழ், சிங்கள கலாசாரத்தில் புதிதாக வயலில் அருவிவெட்டும் காலத்தில் புதிர்காய்ச்சி, பொங்கல் பொங்கும் பழக்கம் சிலரிடமுண்டு. இது செழிப்பைக் காட்டுகிறது. இப்படிப்பட்ட நல்ல பழக்கவழக்கங்களைச் செய்வது நன்று.

கலாசாரம் என்பது காலத்திற்கேற்ப வளரக் கூடியதாக இருக்க வேண்டும். நாம் கலாசாரம் என எண்ணுவது இவ்வளவு காலமும் உள்ள பழக்கவழக்கங்களைப் பாதுகாப்பது என்றே எண்ணுகிறோம். எமது கலாசாரத்தில் அர்த்தமுள்ள புதியவைகளைச் சேர்க்க முடியும். பூப்படைந்த நேரத்தில் நல்ல பழக்க வழக்கங்களைச் சேர்த்துக் கொள்வது பிழையல்ல.

ஆண்பிள்ளையைப் பொறுத்த வரையில் பூப படைவதைப் பற்றிப் பெற்றோருக்கு அறிவில்லாததால் இப்படிப்பட்ட பழக்கவழக்கங்களைச் செய்வதில்லை. பெண் பிள்ளைகளுக்கு சினைப்பை 2 இருப்பதைப்போன்று, அண்டசோகம் (விதை) இரண்டு ஆணுறுப்பின் கீழ் உள்ளது. இதிலே தான் விந்து அல்லது ஆண் உயிரணு உருவாகின்றது. பூப்படையும் காலம் நெருங்கியதும் முதன் முறையாக விந்து வெளியேறும். பெரும்பாலும் இரவில் கனவு காணும் போது விந்து வெளிவரலாம். இது நடந்தால் அப்பிள்ளை பூப்படைந்து விட் டது, அல்லது பெரிய பிள்ளையாகி விட்டது எனலாம். இதற்கு முன் உரோமம் முளைப்பது, குரல் மாறுவது போன்ற அடையாளங்கள் தென்படலாம்.

(அடுத்த வாரம் தொடரும்)

எஸ்.ஜே.யோகராசா,
உளவளத்துணை ஆலோசகர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*கூழும் குடியும் ஒருங்குஇழக்கும் கோல்கோடிச்*
*சூழாது செய்யும் அரசு.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## அமைதியிலும் அவலம்!

உயர்பாதுகாப்பு வலயத்தில் - இடம்பெயர்ந்த மக்களை மீளவும் குடியேற்ற வேண்டுமென்ற கோரிக்கை உறுதியுடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றபோது -

தமது சொந்த இடங்களை எட்டிப் பார்க்கக்கூட முடியாத அவலநிலையில் வாழ்ந்துவரும் அம்மக்களின் மீதான சுமைகளும், எதிர்நோக்கும் நெருக்கடிகளும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றன.

பத்தாண்டுகளுக்கு மேலாக வலி.வடக்குப் பகுதிக்கும், ஐந்து, ஆறு ஆண்டுகளாக யாழ்.குடாநாட்டின் ஏனைய உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கும் - அனுமதிக்கப்படாமல், உறவினர் - நண்பர்கள் வீடுகளிலும், அகதிமுகாம்களிலும், வாடகை செலுத்தியும் - நிரந்தரமற்ற வாழ்வு வாழ்ந்த மக்கள் - தாம் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் இடங்களிலும் புதிய பிரச்சினைகளைச் சந்திக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டு வருகின்றனர்.

வலிகாம் வடக்குப் பகுதியில் பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் தமது குடிமனைகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதால்- அங்கிருந்து வெளியேறி வாழும் மக்கள் - தாம் தற்போது வாழும் வீடுகளுக்கு உரிமையாளர்கள் வரத் தொடங்கியிருப்பதால் - அவற்றிலிருந்தும் வெளியேற வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் - இவ்வாறு நூற்றுக் கணக்கான குடும்பங்கள் தாம் வாழும் தற்காலிகக் குடிமனைகளிலிருந்து வெளியேறி நடுத்தெருவுக்கு வந்திருப்பதைக் காணமுடிகின்றது.

இவர்கள் - தங்குமிடம் தேடி அலையும் காட்சிகள் கல்மனதையும் கரைப்பனவாக இருக்கின்றன.

வளமும் செழுமையும் மிக்க தமது சொந்தப் பிரதேசங்கள் - பற்றைகள் மூடி பாழ்பட்டுக்கிடக்க, ஏதிலிகளாய் அலையும் துயரினுள் மூழ்கியிருக்கும் இவர்களைத் தேற்றுவார் யாருளர்?

அதேவேளை - தமது தொழில் நடவடிக்கைகள் இன்னும் வாய்ப்பிழந்து போக - அன்றாடச் சீவியத்திற்கே அல்லலுறும் பரிதாபநிலைக்கு இம்மக்கள் ஆளாக்கப்பட்டு வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க - யாழ்.நகரப்பகுதிகளை அண்டிய கரையோரப் பிரதேசங்களில் பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டதால் வெளியேறியுள்ள மக்களின் பாடு வார்த்தைகளில் வடிக்கமுடியாதநிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது.

ஏற்கனவே சன அடர்த்திமிக்க குடிமனைகளில் - மீளக் குடியமர முடியாத மக்களும் சேர்ந்து வாழ்வதால்- ஏற்படும் பிரச்சினைகள் பல்கிப் பெருகிவருவதாக அப்பகுதிகளில் வாழ்வோர் மனம் நொந்து கூறுகின்றனர்.

அளவுக்கு மீறிய சன அடர்த்தி நிறைந்த சூழலானது- சுகாதாரச் சீர்கேடுகளையும், இன்னும் நகர்ந்து சமூகச் சீரழிவுகளுக்கும் வாய்ப்பானதாக அமைந்து வருவதாக அம்மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைய தினங்களில் - யாழ். குடாநாட்டை அச்சுறுத்திய வைரஸ் தொற்றுக் காய்ச்சலுக்கும் - இப்போதும் பயமுறுத்திவரும் டெங்குக் காய்ச்சலுக்கும் வாய்ப்பான பிரதேசமாக கடற்பகுதிகளை அண்டிய பகுதிகள் இருப்பதாகச் சுகாதார வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

கடற்தொழிலையே நம்பி வாழும் பெரும்பான்மையான இம்மக்ளுக்கு - தொடர்ந்தும் நெருக்குதல்களும், தடைகளும் கண்மூடித்தனமாக விதிக்கப்படுவதால், கடற்தொழிலாளர்கள் தமது குடும்பங்களின் அன்றாட வயிற்றுப்பாட்டுக்காவது உழைக்க வேண்டியவர்களாக விரக்திநிலையில் வாழ்வதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

இவ்வாறு - வாழ்வின் துயரத்தில் உழலும் மக்களுக்கு, இன்னுமொரு பேரிடி தரும் செய்தியாக வந்து சேர்ந்திருக்கிறது - புனர்வாழ்வு, புனரமைப்புக்கான நிதியுதவிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடு.

யாழ். மாவட்டத்தில் தமது சொந்த இடங்களுக்குச் சென்று மீளக்குடியமராத, இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளமையானது - ஏதோ கிடைக்கவிருந்த மிகச்சிறு உதவியும் கானல்நீராகி விட்ட கொடுமையைத் தந்திருக்கிறது.

இது ஒரு தொடர்கதையாக - புனரமைப்பு, புனர்வாழ்வு நடவடிக்கைகளில் தாம் ஒதுக்கப்பட்டுவிடுவோமோ என்ற ஆதங்கமும் இந்த மக்களிடையே எழுந்திருக்கிறது.

ஒருபுறம் தமது சொந்த வாழ்விடங்களுக்குத் திரும்புவதைத் தடுத்துவரும் அரசாங்கமும் இராணுவமும், மறுபுறம் - கிடைக்கும் உதவிகளையும் மறுத்துவிடுவதானது இந்த மக்களை நடைப்பிணங்களாக்கிவிடும் நிலைக்கு இட்டுச்செல்லும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கருத்திற்கொள்ளவேண்டும்.

இடம்பெயர்ந்து வாழும் மக்களின் இந்த அவலங்களையும், துயரங்களையும் நீக்குவதற்கு நிரந்தரமான தீர்வாக - அம்மக்களைத் தமது சொந்த இடங்களில் குடியமர்த்தி, அவர்களுக்குச் சுமுகவாழ்வொன்றை வழங்குவதே - ஒரேயொரு வழியென்பதையும் அனைவரும் ஒரே குரலில் எடுத்துச்சொல்வோம்.

# போர்நிறுத்த உடன்படிக்கை மாற்றம்; செய்திகளில் உண்மை எதுவுமில்லை!

## கண்காணிப்புக்குழு பேச்சாளர், பீரிஸ் அறிவிப்பு!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாட்டில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டு, புதிய உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படலாம் என வெளியான தகவல்கள் பிழையானவை எனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் ரெய்ரூர் ரொக்கில்சன் தெரிவித்தார்.

போர்நிறுத்த உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்ய வேண்டிய சூழ்நிலை எதுவும் ஏற்படவில்லை என்றும் - உடன்படிக்கை மீறல்கள் பாரியளவினதாக இல்லையென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இதே கருத்தை வெளியிட்டிருக்கும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் -

போர்நிறுத்த உடன்பாட்டின் மீதே வெளிநாடுகள் நம்பிக்கை வைத்து நிதியுதவிகளைச் செய்து வருகின்றன. அனைவருமே இந்த உடன்பாட்டில் திருப்தி கொண்டிருக்கின்றனர். எனவே, புதியதொரு உடன்பாட்டுக்குத் தேவையான நிலை உருவாகவில்லை எனக் கூறினார்.

## வெளிச்சம் சஞ்சிகையின் எண்பதாவது இதழ் வெளிவந்தது!

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் வெளியீடான “வெளிச்சம்” சஞ்சிகையின் எண்பதாவது இதழ் வெளியாகியுள்ளது.

இந்த இதழில் - தமிழீழத் தேசியத் தலைவரின் கருத்துரையுடன் மாலிகா, அமரதாஸ், அநாமிகன், கருணைரவி, பளை கோகுலராகவன், செல்வம், சத்தியமலரவன், ப.அருள்நேசன், மருதம் - கேதீஸ், தேஜாமன், பொன்.காந்தன், சாந்தினி, முஹியிதீன் யாத்திரீகன், ஆத்மரிஷ், சந்திரபோஸ் சுதாகர், சு.வில்வரத்தினம், புதுவை இரத்தினதுரை, சித்தாந்தன், த.ஜெயசீலன், கோ.சி.கலைக்கதிர், அ.அன்ரனி ஆகியோரின் கவிதைகளும் ப.புஸ்பரட்ணத்தின் வரலாற்றுக் கட்டுரையொன்றும் இடம்பெற்றிருக்கின்றன.

இவற்றுடன் நந்தி, தீபா, குமரேஷ், ராணி ஸ்ரீதரன், செங்கை ஆழியான் ஆகியோரின் சிறு கதைகளும் மானுடத்தின் தமிழ்க் கூடல் பற்றிய புகைப்படங்கள் மற்றும் பதிவுகள் வெளிப்பாடுகள் என்பனவும் மலைமகள், சிவாஜினி, சிவசங்கர் ஆகியோரின் கள வெளிப்பாட்டுப் படைப்புகளும், சு.மகேந்திரன் நேர்காணலும், சோ.பத்மநாதன், வின்சென்ற் புளோரன்ஸ் ஆகியோரின் மொழி பெயர்ப்புக் கவிதைகளும் தூது பகுதியும் இந்த இதழில் இடம்பெற்றுள்ளன.

ஓவியங்களை கிக்கோ, கோபாலி, நிலாந்தன், முல்லைக் கோணேஸ், பயஸ் ஆகியோர் வரைந்திருக்கின்றனர்.

## உயர்தர வகுப்பு மாணவருக்கு ஆற்றுப்படுத்தல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான ஆற்றுப்படுத்தல் கருத்தரங்குத் தொடர், நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்குத் தொடர் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் ஏற்பாட்டில் - பல்கலைக்கழக விரிவுரையாளர்களினாலும், துறைசார் முன்னணி ஆசிரியர்களினாலும் நடாத்தப்படவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்களை ஏற்கனவே பூர்த்திசெய்து அனுப்பாதவர்கள், நாளை சனிக்கிழமைக்கு முன்னதாக விபரங்களை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நாளை, பொருளியல் பாடத்திற்கான கருத்தரங்கு நடைபெறும் எனவும், ஏனைய பாடங்களுக்கான திகதிகள் தொடர்ந்து பத்திரிகைகள் ஊடாக அறிவிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தல் முறையை மாற்றியமைக்க கரு ஜெயசூரிய தலைமையில் குழு

## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான தகுதியும் வரையறுக்கப்படும்

(கொழும்பு)

தற்போதுள்ள தேர்தல் முறைமையை மாற்றியமைப்பதற்காக அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையிலான நாடாளுமன்ற உபகுழுவொன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன், அரசியற் கட்சிகளையும் சந்தித்து இது தொடர்பான கருத்துக்களை அறிந்து வருவதாகப் பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தேர்தல்முறைச் சீரமைப்புக்கான நாடாளுமன்ற உபகுழுவில் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் உட்பட 8 அமைச்சர்கள் இடம்பெறலாம் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான அடிப்படைத் தகுதிகள், இடைத்தேர்தல், ஒதுக்கப்பட்ட (ரிசேர்வ்) தொகுதிகள், பல உறுப்பினர்களைக் கொண்ட தொகுதிகள் பற்றியும் நாடாளுமன்ற உபகுழு கவனத்தில் எடுத்துக்கொள்ளும் எனத் தெரியவருகிறது.

## புலிகளுடன் இணைய வந்த மாணவி பெற்றோரிடம் ஒப்படைப்பு

(சரசாலை)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய வந்த 15 வயது மாணவியொருவர் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

தென்மராட்சி அரசியற்துறை அலுவலகத்திற்கு கடந்த 23 ஆம் திகதி துன்னாலையைச் சேர்ந்த மாணவியொருவர் புலிகள் இயக்கத்தில் இணைவதற்குச் சென்றிருந்தார். இவரை தென்மராட்சி அரசியற்துறையினர் பெற்றோரிடம் ஒப்படைத்துள்ளனர்.

18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை தமது இயக்கத்தில் இணைத்துக்கொள்வதில்லை எனப் புலிகள் தீர்மானித்துள்ளதும் இதன்படி, இயக்கத்தில் இணையும் 18 வயதுக்குக் குறைந்த சிறுவர்களை பெற்றோரிடம் அவர்கள் ஒப்படைத்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (ச,34)

## உலகவங்கி நிதியுதவி அடுத்த மாதம் முதல்!

(கொழும்பு)

வட - கிழக்குப் பகுதி புனரமைப்புக்கான உலகவங்கியின் உதவித்திட்டத்தின் கீழ் அடுத்தமாதம் நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வட - கிழக்குப் பகுதிப் புனரமைப்புப் பணிகளுக்காக 43 மில்லியன் டொலர் நிதியுதவியை உலகவங்கி வழங்கத் தீர்மானித்திருந்தது. இதற்கான நிதியுதவியே அடுத்த மாதம் முதல் வழங்கப்படவுள்ளது.

சுகாதாரம், மீள்குடியமர்வு, கல்வி, உட்கட்டமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

## புனர்வாழ்வு அமைச்சு சிபாரிசு செய்தும் மீளக்குடியமர அனுமதியில்லையா?

### மறவன்புலோ விவசாயச் சம்மேளனம் கேட்கிறது

(சரசாலை)

புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சு, அகதிகளை மீளக்குடியமர அனுமதிக்கும்படி பாதுகாப்பு அமைச்சுக்கு சிபார்சு செய்த பிரதேசத்தில் மீளக்குடியமர அனுமதியுங்கள் என மறவன்புலோ விவசாயச் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

மறவன்புலோ விவசாய சம்மேளனம் - புனர்வாழ்வு, அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தன, தமிழீழ விடுதலைப்புலிகள், அரச அதிபர் ஆகியோருக்கு இது தொடர்பான மகஜரை அனுப்பியுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக - தென்மராட்சி தெற்கு, தனங்களப்பு, மறவன்புலோ மக்கள் இடம்பெயர்ந்து பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

இந்தப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படாமையால், தமது பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர் செய்ய முடியாது வருமானமின்றி கஷ்ட நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு மீளக்குடியமர்ந்தவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் ஏனைய மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் இடம்பெயர்ந்த மக்கள் அவர்களது சொந்த இடத்திற்குச் செல்வதற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கி மீளக்குடியமர நடவடிக்கை எடுக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (34,ச)

# ஆசிரியர் - மாணவர்கள் உறவில் விரிசல்

# அதிகரிக்கும் காரணம் அகற்றப்பட வேண்டும்!

**பொருளியல் சிறப்புப் பட்டதாரியான அ.குமாரவேல் திட்டமிடல் இலாகாவில் பணிபுரிந்து, ஆசிரியத் தொழிலில் கொண்ட ஆர்வம் காரணமாக யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராகி, தற்போது அக்கல்லூரியின் பட்டப்படிப்புக்கள் பிரிவின் இணைப்பாளராக உள்ளார். சர்வதேச விடயங்கள் பற்றியும் சமகால அரசியல் பற்றியும் அநேக கருத்தரங்குகளில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். வெளிவாரிப் பட்டப்படிப்புக்களுக்கான விரிவுரையாளராகக் கடந்த 32 வருடங்களாகச் சேவையாற்றி வருகின்றார். பல சமய, சமூக நிறுவனங்களில் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றார். இவருடனான நேர்காணலின் முதற் பகுதி கடந்த புதன்கிழமை பிரசுரமாகியது. அதன் தொடர்ச்சி இது.**

*கேள்வி:* மாறிவருகின்ற உலகில், உலகம் ஒரு பூகோளக் கிராமமாகி வருகின்றவேளையில், கல்வியிலும் மாற்றங்கள் வருவது தவிர்க்க முடியாதது. அத்தகைய மாற்றங்கள் கல்வியின் போக்கினை எவ்வாறு பாதிக்கின்றது?

*பதில்:* உண்மையில் உலகம் வியத்தகு மாற்றங்களை அடைந்து வருகின்றது. நாளை பிறக்கபோகும் பிள்ளை நேற்றுப் பிறந்த பிள்ளையைவிட அறிவுகூடிய உலகில் பிறக்கின்றது என்பது உண்மைதான். தொழிற்சந்தையின் தேவையை ஈடு செய்வதற்காகக் கல்வி என்ற நிலை உருவாகியுள்ளது.

மாறிவரும் உலகம் கல்வியின் மீது ஏற்படுத்திய தாக்கம் இதுவாகும். உலகம் மாறி வரும் சூழலில் சூழ்ச்சிகளும், கபடத்தனமும், ஏமாற்றுவதும் அதிகரித்துக் கொண்டே போகிறது. ஒரு பாடசாலை திறக்கப்படும் போது ஒரு சிறைச்சாலை மூடப்படப்போகிறது என முன்பு மனிதன் கனவு கண்டான். இன்று பாடசாலைகள் அதிகரித்துள்ளன. மனிதப் பண்புகள் மறைந்து கொண்டு போகின்றபோது, கல்வி வளர்ந்து செல்கிறது எனக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

கல்வி வாழ்கையின் முற்றுமுழுதான விடுதலைக்கு உதவவேண்டும். வாழ்வின் ஒரு மூலையைப் பற்றிப் பிடிப்பதற்காக மட்டும் கல்வி




இருக்க முடியாது. பதவியைப் பெறுவதற்கும், அதில் உயர்ந்த இடத்தை ஆக்கிரமித்துக் கொள்ளவும், சுய நலன்களை வளர்த்துக் கொள்வதற்குமெனக் கல்வி இருக்கக்கூடாது.

வாழ்க்கையின் பரந்துபட்ட மகிழ்ச்சியினையும் துக்கங்களையும் அவற்றில் ஆழ்ந்திருக்கும் விசேட தன்மைகளையும் அறிந்து கொள்ளவும் கல்வி பயன்பட வேண்டும். பிரச்சினைகளுக்கு விடைகளைக் காணக் கல்வி தேவை. பிரச்சனைகளை உருவாக்கக் கல்வி தேவையில்லை.

பொருளாதார நலன்களை மட்டுமல்ல சமூக வாழ்வின் சுக, துக்கங்களை அறிந்துகொள்ளவும் கல்வி பயன்பட வேண்டும். விஞ்ஞானநுட்பங்களை அறிந்து கொள்வது, புதிய புதிய நுட்பங்களைக் கண்டு கொள்வது போன்றவற்றுக்குக் கல்வி பயன்படும்வேளையில், அந்த நுட்பங்கள் மனிதகுல வாழ்வைச் சீரழிக்க முனையும்போது அதைத் தடுக்கும் ஆற்றலையும் கல்வி கொண்டிருத்தல் வேண்டும்.

நுட்பங்களும், முன்னேற்றங்களும் மனிதப் பண்புகளின் இருப்புக்கு ஆபத்தாக மாறி விடமுடியாது. மாறிவரும் உலகின் தேவையைக் கல்வி ஈடுசெய்ய வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ள வேண்டியதெனினும், முன்பும் பின்பும் மனிதப் பண்பு மாற்றமடைய முடியாது.

*கேள்வி:* ஆசிரிய - மாணவ உறவுகள் சீர்குலைந்துள்ளன. இது பற்றி தாங்கள் யாது கூறுகிறீர்கள்?

*பதில்:* ஆசிரியப் பதவி மகத்தானது. உலகிலுள்ள ஏனைய பதவிகளைவிட இது மேலானது, புனிதமானது. எதிர்கால சமூகத்தை உருவாக்கும் பதவி இதுவாகும், இதற்கு அர்ப்பணிப்புத் தேவை. புதிய மாற்றங்கள் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் இடையே பல கருவிகளைத் தோற்றுவித்துவிட்டது.

இது அந்த உறவு குறைவதற்கு ஒரு காரணமாக அமைந்து விட்டது. பாடசாலை, பல்கலைக்கழகம் மட்டுந்தான் கல்வியை வழங்குகின்றன என்பதல்ல. தொலைக்காட்சி, சஞ்சிகைகள், பத்திரிகைகள், வானொலி போன்றவற்றின் ஊடாகவும் அறிவு பெறப்படுகின்றது. இவற்றின் தாக்கங்களும் சில சமயம் உறவைப் பாதிப்பதாகவுள்ளது. இன்று ஆசிரியர் பதவி தகுதியால் மட்டுமல்ல பணத்தாலும், அரசியல் செல்வாக்காலும் பெறக்கூடிய பதவி ஆகிவிட்டது. ஆசிரியராக வருவதற்கு என்றே கல்வி கற்றகாலம் இருந்தது.

ஆனால், இன்று வேறு பதவி கிடையாதுவிட்டால் ஆசிரியர் பதவியாவது பெறவேண்டும் என்ற எண்ணம் பலரிடம் உள்ளது. பட்டதாரி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட பலர் வேறு பதவிகளுக்கு விண்ணப்பம் கோருகின்றபொழுது, அப்பதவிகளுக்கு உடன் விண்ணப்பிக்கின்றார்கள்.

ஆசிரியப் பதவியில் வெறுப்புடனேயே வேறு வழி இல்லாது பலர் கற்பிக்கின்றனர். புறச் சூழ்நிலைகளினால் மாணவர் நல்லொழுக்கநிலை பாதிக்கப்பட்டுவிட்டது.

பெற்றோருடைய செயற்பாடும் பிள்ளைகளைச் சரியாக வழி நடத்த உதவவில்லை. ஆசிரியரின் நெறிப்படுத்தலை மாணவன் ஏற்கும் பக்குவம் இல்லாதிருக்கின்றான்.


குமாரவேல்

நமக்கு ஏன் வீண்வம்பு எனப் பல ஆசிரியர்கள் வாளாவிருந்து விடுகின்றனர். முன்பு கொடுத்த இடத்தைத் தற்போது கொடுக்கவில்லை. அவர்களின் மதிப்பும் குறைந்து செல்கின்றது. வாத்தியார் என்பது போய், வாத்தி என்றாகி விட்டது.

மேலும், இன்று ஆசிரியரின் வேலைச்சுமையும் கூடிவிட்டது. அவர் ஒரு எழுதுவினைஞர் போன்றும் கணிசமான நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது. ஆசிரியரின் குடும்பச்சுமையும் அதிகரித்துள்ளது.

இச்சுமைகளினால் மாணவனை ஊடுருவி நோக்கி அவனைத் தன்பால் ஈர்க்கும் சக்தி ஆசிரியருக்குக் குறைந்து செல்கின்றது. இவற்றினால் ஆசிரிய - மாணவர் உறவு நெருக்கமடைவதற்குப் பதில் விரிவடைந்து செல்கின்றது.

*சந்திப்பு:* எஸ். சாந்தகுமார்

நமது ஈழநாடு வழங்கும்




உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

MEGA பரிசுப் போட்டி

முதற்பரிசு - 25,000
வழங்குவோர்: இரத்தினகோபால்ஸின் இணைந்த நிறுவனம்
சுசுகி ரேடர்ஸ்
59, 61, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
TVS மோட்டார் சைக்கிளின் யாழ்ப்பாண விற்பனை முகவர்.

இரண்டாம் பரிசு - 15,000

மூன்றாம் பரிசு - 10,000
வழங்குவோர்: சந்தியா மல்ரிகோட்டியாட்
531, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு
Fancy goods, gift items, fevicryl & acron paint items.

இன்னும் ஏராளமான
ஆறுதல் பரிசுகள்!
வினாக்கொத்துக்கு விடை தந்து
பரிசுகளை அள்ளிச் செல்லுங்கள்!!

உலகக் கிண்ண கிரிக்கெட் - 2003
வெல்லுங்கள்...! அள்ளுங்கள்...!

உலகக் கிண்ணக் கிரிக்கெட் பற்றிய வினாக்களுக்கு விடை தந்து பணப்பரிசுகளை, வெகுமதிகளை உங்களதாக்குங்கள்.

1. உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி 1975 இல் முதன் முதலாக எந்த நாட்டில் நடைபெற்றது? (....................)
2. இரண்டு முறை தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று மூன்றாவது முறையாக வெல்லும் வாய்ப்பை இழந்த அணி எது? (....................)
3. 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகள் எந்தெந்த நாடுகளில் நடைபெறப்போகின்றன? (....................)
4. 2003 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆட்டத்தொடர் நாயகனாக (MAN OF THE SERIES) விளங்கப்போகும் வீரன் யார்? (....................)
5. 2003 உலகக் கிண்ணத்தை வெற்றி கொள்ளப்போகும் அணி யாது? (....................)

பூர்த்தி செய்துவிட்டீர்களா...? இது போன்ற ஐந்து கூப்பன்களை நிரப்பி, எதிர்வரும் மார்ச் 06 ஆம் திகதிக்கு முன்பாக -

'உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003'
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்குத் தபாலிலோ, நேரிலோ அனுப்பி வையுங்கள்.

பெயர்: ----------------
வயது: ----------------
முகவரி: ----------------

*சரியான விடைகளை எழுதுபவர்களிலிருந்து அதிர்ஷ்டசாலிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.*

*போட்டி முடிவுகள் மார்ச் 28 ஆம் திகதியன்று 'நமது ஈழநாடு' பத்திரிகையில் வெளியாகும்.*



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




### காலித் மசூட்



*பிறந்தது* - 8.2.1976 (பங்களாதேஷ்) (அணித்தலைவர்)
*அணிகள்* - ராஜ்ஷாஹி டிவிசன் (பங்களாதேஷ்)
*சுருக்கமாக* - பைலட்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். விக்கெட் காப்பாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - 2000/01 - எதிர் இந்தியா
*ஒருநாள் அறிமுகம்* - 1994/95 - எதிர் இந்தியா

1993/94 இல் இருந்து அரியப் பட்டவர், நாட்டின் அதிசிறந்த விக்கெட் காப்பாளர், நம்பிக்கையான துடுப்பாட்ட வீரர், 33 ஒரு நாள் போட்டிகளில் ஆடியவர், நிரந்தரமான டெஸ்ட் அணி வீரர், ஒருநாள் போட்டிகள் 83, ஓட்டங்கள் 1002, நான்கு அரைச்சதங்கள், 10 ICC கிண்ண ஆட்டங்களில் ஆடியவர்.

### மொஹம்மட் அல் ஷகாரியர்



*பிறந்தது* - 23.4.1978 டாக்கா (பங்களாதேஷ்)
*அணிகள்* - டாக்கா மெட்ரோ பொலிஸ்
*சுருக்கமாக* - அல் ஷகாரியர் மற்றும் ரோக்கொண் (அதிரடி வீரன்)
வலதுகைத் துடுப்பாட்டவீரர். LEG BREAK பந்து வீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - 2000/01 எதிர் இந்தியா
*ஒருநாள் போட்டி அறிமுகம்* - 1998/99 எதிர் பாகிஸ்தான்.

இலகுவாக ரன் குவிப்பவர், 15 வயதில் முதல்தர ஆட்டங்களில் நுழைந்தவர், இரண்டு வகை ஆட்டங்களிலும் (ஒருநாள், டெஸ்ட்) திறமைசாலி, எவ்வகைப் பந்தையும் தன்வயப்படுத்தி ஆடும் ஆற்றல் மிக்கவர், இன்னும் நிறையக் கற்கவேண்டிய இளைஞர், இனிவரும் காலங்களில் அணியின் நிரந்தர அங்கத்தவர், ஒரு நாள் போட்டிகள் 53, ஒரு நாள் சர்வதேச போட்டிகள் 22 என்றவாறு 2500 ஓட்டங்களுக்கு மேல் பெற்றவர்.

### ஆலோக் கப்பாலி



*பிறந்தது* - 1.1.1984 சிட்டாகொங்
*அணிகள்* - சிலெட்டிவிசன்
*சுருக்கமாக* - ஆலோக் கப்பாலி
வலதுகைத் துடுப்பாட்ட வீரர். LEG BREAK பந்து வீச்சாளர்.
*ஒரு நாள் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை.
*டெஸ்ட் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை.

5 டெஸ்ட் ஆட்டங்களில் 307 ஓட்டங்கள், கூடிய ஓட்ட எண்ணிக்கை 85, ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள் 11, ஓட்டங்கள் 228, கூடிய ஓட்ட எண்ணிக்கை 89, ஒரு நாள் ஆட்டங்களில் 603 ரன்கள் மற்றும் 15 விக்கெட்டுக்கள் பெற்றவர்.

### குவாஸி ஹபிபுல் பாஷார்



*பிறந்தது* - 17.08.1972
*அணிகள்* - பிமான் பங்களாதேஷ், பங்களாதேஷ் . எயார்லைன்ஸ்
*சுருக்கமாக* - ஹபிபுல் பாஷார்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலது OFF BREAK பந்து வீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2000/01 எதிர் இந்தியா
*ஒருநாள் அறிமுகம்* - 1994/95 எதிர் இலங்கை

எவ்வகைப் பந்தையும் இலகுவாகக் கையாளும் ஆற்றல் மிக்கவர். இவரது சிம்பாப்வேக்கு எதிரான 70 ஓட்டங்கள் இவர் மீது பார்வையைத் திருப்பியது, மிகவேகமாகப் பந்து வீசும் ஆற்றலும் பெற்றவர், மேற்கிந்திய அணிக்கெதிராக 143 ஓட்டங்கள் பெற்றவர், இந்தியாவுக்கு எதிராக இவர் பெற்ற அரைச்சதமே, 71 டெஸ்ட் போட்டிகளில் பங்களாதேஷ் பெற்ற முதல் அரைச்சதமாகும், இதன்பின் பெற்ற அரைச்சதங்கள் பல. 17 டெஸ்ட் ஆட்டங்களில் - ஒரு சதம், 9 அரைச்சதங்கள், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் - 27 போட்டிகளில் 548 ஓட்டங்கள், 6 அரைச்சதங்கள், ஒருநாள் போட்டிகளில் 15 அரைச்சதங்கள்.

### அப்துல் ஹனான் சர்க்கார்



*பிறந்தது* - 1.12.82 டாக்கா
*அணிகள்* - பாரிசல் டிவிசன் (பங்களாதேஷ்)
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை.
*ஒருநாள் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை

5 டெஸ்ட் ஆட்டங்களில் 226 ஓட்டங்கள், இரண்டு அரைச்சதம், ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள் நான்கு, ஒருநாள் போட்டிகள் 13, ஓட்டங்கள் 179, சிறந்த பந்து வீச்சு 4/35.

### ஹிஷானுல் ஹக்



*பிறந்தது* - 1.12.1979 சிட்டாகொங் (பங்களாதேஷ்)
*அணிகள்* - சிட்டாகொங் டிவிஷன் (பங்களாதேஷ்)
*சுருக்கமாக* - சீசான்.
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலது OFF BREAK பந்து வீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை
*ஒருநாள் அறிமுகம்* - 2002/03 எதிர் மேற்கிந்திய அணி

முதற்தர ஆட்டங்கள் 22, ஓட்டங்கள் 966, கூடிய ஓட்டம் 101, ஒரு நாள் ஆட்டங்கள்-20, ஓட்டங்கள் 347, கூடிய ஓட்டம் 90, உலகக்கிண்ண முதலாவது ஆட்டம் இவரது மூன்றாவது சர்வதேச ஒருநாள் ஆட்டமாக இருக்கும்.

### மொஹம்மட் சன்வார் ஹொசைன்



*பிறந்தது* - 5.8.1973 டாக்கா
*அணிகள்* - பிமான் பங்களாதேஷ், பங்களாதேஷ் எயர்லைன்ஸ், சிட்டாகொங் டிவிஷன், பாரிசல் டிவிஷன்.
*சுருக்கமாக* - சன்வார் ஹொசைன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.
வலதுகை OFF BREAK சுழல் பந்து வீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - 2001/02 எதிர் நியூஸிலாந்து.
*ஒருநாள் அறிமுகம்*- 1997/98 எதிர் இந்தியா.

இவரது துடுப்பாட்டத்தில் நிதானமும், நம்பிக்கையும் காணப்படும், மூன்றாவது அல்லது நான்காவது நிலையில் களமிறங்குபவர் இவர், இவர் இலங்கைக்கு எதிராக 76 ஓட்டங்கள் எடுத்தவர். 14 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும்,

## பங்களாதேஷ் அணி



7 டெஸ்ட் ஆட்டங்களிலும் ஆடியுள்ளார், மேலும் 6 ICC கிண்ணப் போட்டிகளிலும் ஆடியவர்.

### காலித் மக்மூத்



*பிறந்தது* - 26.07.1971 டாக்கா
*அணிகள்* - டாக்கா மெட்ரோபொலிஸ்
*சுருக்கமாக* - சூஜோன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2001/02எதிர் சிம்பாப்வே
*ஒருநாள் அறிமுகம்* - 1997/98 எதிர் இந்தியா

மூன்று டெஸ்ட் ஆட்டங்கள், 34 சர்வதேச ஒரு நாள் போட்டிகள், முதற்தரப் போட்டிகள் 24, ஒரு நாள் போட்டிகள் 62, ICC கிண்ணப் போட்டிகள் 4 என்ற வகையில் இவர் கணக்கில் அடங்கும். ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 465 மற்றும் ஒரு நாள் போட்டிகளில் 1,051 என்ற வகையில் ரன் சேகரித்துள்ளார்.

### மொஹம்மட் மஞ்ஜூரல் இஸ்லாம்



*பிறந்தது* - 7-11-1979 குல்நா
*அணிகள்* - குல்நா டிவிசன், பங்களாதேஷ்
*சுருக்கமாக*- மன்ஜூரல் இஸ்லாம் மற்றும் மொன்ஜு
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்
இடதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2000/01 எதிர் சிம்பாப்வே
*ஒருநாள் அறிமுகம்* - 1998/99 எதிர் பாகிஸ்தான்

சிம்பாப்வேயுடனான ஆட்டங்களின் பின் இவர் வங்காளத்தின் நட்சத்திரம், சிறந்த பந்துவீச்சு 6/81, சிலிப் பகுதியில் காட்சுகள் அமையும் வகையில் பந்து வீசுவது இவர் சிறப்பு, 1999 உலகக் கிண்ணப் போட்டியில் இவருக்கு நல்ல அனுபவம், இடது கை விளையாட்டு வீரராக இருப்பது பங்களாதேஷ் அணிக்கு ஒரு வரப்பிரசாதம்.

### மொஹம்மட் அஷ்ரபுல்



*பிறந்தது* - 9-9-1984 டாக்கா
*அணிகள்* - டாக்கா மெட்ரோபொலிஸ்
*சுருக்கமாக* - அஷ்ரபுல் மாட்டின்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
LEG BREAK சுழல் பந்து வீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2001/02 எதிர் இலங்கை
*ஒருநாள் அறிமுகம்* - 2000/01 எதிர் சிம்பாப்வே

ஆசிய டெஸ்ட் சுற்றுப்போட்டியில் (2001) இலங்கைக்கு எதிராக அறிமுகத்திலேயே செஞ்சரி, மிகக் குறைந்த வயதில் (17 வயது 63 நாள்) சர்வதேசரீதியில் சென்சரி போட்டவர், முஸ்டாக் முகமட் (பாகிஸ்தான்), ஹமில்டன் மஸாகாட்சு (சிம்பாப்வே) இருவரின் குறைந்த வயது டெஸ்ட் சென்சரி சாதனையை முறியடித்தவர், இவர் சுழல்பந்து வீச்சாளராகத் தொடங்கி துடுப்பாட்ட வீரராகப் பரிணமித்தவர், 9 டெஸ்டுகள் 385 ஓட்டங்கள், அதிகூடியஓட்டம் 114, ஒருநாள் போட்டிகள் 23, ஓட்டங்கள் 275, நிறைவான எதிர்காலம் உள்ளவர்.

### மொஹம்மட் ரபீக்



*பிறந்தது* - 5-9-1970 டாக்கா
*அணிகள்* - சிலெட் டிவிசன் டாக்கா
*சுருக்கமாக* - மொஹம்மட் ரபீக்
இடதுகைத் துடுப்பாட்ட வீரர்
மெதுவான இடதுகை ORTHODOX பந்துவீச்சாளர்.
*டெஸ்ட் அறிமுகம்* - 2000/01 எதிர் இந்தியா
*ஒருநாள் அறிமுகம்* - 1994/95 எதிர் இந்தியா

ரசிகர்கள் நிறையக் கொண்டவர், எந்த வரிசை நிலையிலும் துடுப்பெடுத்தாடக் கூடியவர், பந்து வீச்சில் மிகுந்த திறமை காட்டி வருபவர், ஆரம்ப வீரனாகச் சென்று கென்யாவுக்கு எதிராக 77 ஓட்டங்கள் பெற்றவர், வங்காளப் பந்து வீச்சாளர்களில் சச்சினை மூன்று முறை அவுட் ஆக்கியவர் இவர்.

### தல்ஹா ஜூபெயர்



*பிறந்தது* - 10.12.1985 பரிட்பூர் டாக்கா
*அணிகள்* - டாக்கா மெட்ரோபொலிஸ் பங்களாதேஷ்
*சுருக்கமாக* - தல்ஹா ஜூபெயர்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்துவீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை
*ஒருநாள் அறிமுகம்* - 2002/03 எதிர் நியூசிலாந்து

மிக இளையவர், 6 டெஸ்ட் மாட்சுகள், 4 சர்வதேச ஒருநாள் போட்டிகளில் விளையாடியவர், நிறைந்த எதிர்காலம் உள்ளவர்.

### தாப்பாஸ் குமார் பைஸ்யா



*பிறந்தது* - 25.12.1982 சிட்டாகொங்
*அணிகள்* - சில்லெட் டிவிசன் பங்களாதேஷ்
*சுருக்கமாக*- தாப்பா பைஸ்யா
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மிதவேகப் பந்து வீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை
*ஒருநாள் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை

2002 இல் சடுதியாக எல்லாப் பத்திரிகைகளிலும் விளையாட்டுத்துறைப் பகுதியில் பிரபல்யம் பெற்றவர், உயரம் கூடிய இவர் வேகமாகப் பந்து வீசக் கூடியவர், 5 டெஸ்ட் போட்டிகள், 10 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் விளையாடியவர், டெஸ்ட் விக்கெட்டுக்கள் 11, சர்வதேச ஒருநாள் விக்கெட்டுக்கள் 10 இற்கும் சொந்தமானவர்.

### ஷேக் துஷார் இம்ரான்



*பிறந்தது* - 10.12.1983 ஜெஸ்சூர், குல்நா
*அணிகள்* - குல்நா டிவிஷன், பங்களாதேஷ்
*சுருக்கமாக* - துஷார் இம்ரான்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2002 எதிர் இலங்கை
*ஒருநாள் அறிமுகம்* - 2001/02 எதிர் சிம்பாப்வே

2000/2001 இவரது அதிர்ஷ்ட வருடம், உடனடியாக அதிரடிப் பாணியில் ஆட விரும்புபவர், பலம்வாய்ந்த மொகமடான் அணிக்கு எதிராக உள்ளூரில் 104 பந்துகளில் 131 ஓட்டங்கள் விளாசியவர், இவரது வயதைப் பொறுத்து இன்னும் நிறைந்த எதிர்காலம் இவருக்கு இருக்கும். எதிர்கால சிறந்த துடுப்பாட்ட வீரருக்குரிய அத்தனை இலட்சணங்களும் இவருக்கு உண்டு.

### மஷ்ராபா பின் மொர்த்தாஸா



*பிறந்தது* - 5.10.1983 குல்நா
*அணிகள* - பங்களாதேஷ்
*சுருக்கமாக*- கௌசிக்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்
வலதுகை மித வேகப்பந்து வீச்சாளர்
*டெஸ்ட் அறிமுகம்* - 2001/02 எதிர் சிம்பாப்வே
ஒருநாள் அறிமுகம் - 2001/02 நியூசிலாந்து

4 டெஸ்ட் ஆட்டங்கள், 12 டெஸ்ட் விக்கெட்டுக்கள், ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் 3, முதற்தர ஆட்டங்கள் 3, மிக இளம் வீரர், பந்துவீச்சில் எதிர்காலத்தில் நன்றாகப் பிரகாசிக்கக் கூடியவர்.

### நாளும் ஒரு வினா

**உலகக் கிண்ண ஒரு நாள் கிரிக்கெட் போட்டிகளில் முதல் சதம் அடித்தவர் யார்?**

**டெனிஸ் ஏமிஸ் 137 இங்கிலாந்து (1975)**

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# அத்துமீறி மீன்பிடித்த தமிழக மீனவர்கள் கைது

## 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு

காங்கேசன்துறை கடற்பரப்பில் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் நேற்று மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் இரவு காங்கேசன்துறைக் கடற்பரப்பில் இரு றோலர்களில், 10 இந்திய மீனவர்கள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர், இவர்களை கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களிடமிருந்து இரு றோலர்களும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளும் மற்றும் கடற்தொழில் உபகரணங்களும் மீட்கப்பட்டன.

இவர்களை நேற்று மல்லாகம் நீதிமன்றில் நீதிவான் சரோஜினி தேவி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது, எதிர்வரும் 7 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், இவர்களை விடுவிப்பது தொடர்பாக இந்தியத்துாதரகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பொலிஸாருக்குப் பணித்தார்.

அதேவேளை, யாழ். குடாநாட்டு கடற்பரப்பில் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்டுவரும் இந்திய மீனவர்கள், பெருமளவிலான மீனவர்களுடைய வலைகளை அறுத்துச் செல்வதாக கடற்தொழிலாளர்கள் விசனம் தெரிவித்திருக்கின்றனர்.

(ச)

# போராளியின் வித்துடல் கோப்பாயில் விதைப்பு

சுகயீனம் காரணமாக சாவடைந்த வீரவேங்கை இளங்கீரனின் வித்துடல், நேற்று மாலை கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

அதற்கு முன்னர், கைதடி விக்னேஸ்வரா பாடசாலையில் விடுதலைப் புலிகளின் சிறப்பு பரப்புரைப் பொறுப்பாளர் சிறிநாத் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் நடைபெறறது.

இவ்வஞ்சலி நிகழ்வில், பொதுச்சுடரினை யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைக்க, ஈகச்சுடரை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் அமுதாப் ஏற்றி வைத்தார். சிறப்பு அஞ்சலியுரையை சாவகச்சேரி றிபேர்க் கல்லூரி அதிபர் அருந்தவபாலன் நிகழ்த்தினார்.

## வானொலிக் கருவி....

பறப்பதை அவர்கள் விரும்புவது இல்லை என்றும் கருத்து வெளியிட்ட விமல் வீரவன்ச, நோர்வேத் தூதுவரை மிகவும் மோசமான வார்த்தைகளினால் விமர்சித்தார்.

அப்போது குறுக்கிட்ட அமைச்சர் அஸ்வர், ஜே.வி.பியின் கொள்கை என்ன? தாடியும் கொண்டையும் விட்டவர்கள்தான் ஜே.வி.பியா என்று கேள்வி எழுப்பினார்.

அப்போது - ஜே.வி.பி உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்தரப்பு உறுப்பினர்களுக்கும் இடையே காரசாரமான வாய்த்தர்க்கம் ஏற்பட்டது.

தாய்நாட்டைப் புலிகளுக்குக் காடடிக்கொடுக்கும் துரோகிகள் என, ஜே.வி.பி எம்.பி. நந்தன குணதிலக அஸ்வரைப் பார்த்து கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய விமல் வீரவன்ச, சமஷ்டி என்ற சொல்லுக்கு மாறுபட்ட பொருள் விளககங்களை அரசாங்கம் வழங்கி வருவதாகவும் குற்றஞ்சாட்டினார். சமஷ்டியைத்தான் தமிழர்கள் கேட்கின்றார்கள் என்றால், அன்று சமஷ்டிக் கட்சியென ஆரம்பிக்காமல் தமிழரசுக்கட்சியென ஏன் ஆரம்பித்தார்கள் என்று கேள்வி எழுப்பிய அவர், தமிழ் இராச்சியம் ஒன்றைக் கருததில் கொண்டுதானே தமிழரசுக்கட்சியை ஆரம்பித்தார்கள் என்று கூறினார்.

அப்போது குறுக்கிட்ட மனோ கணேசன, தமிழரசு என்றால் தனியான தமிழ்நாடு அல்ல. மொழி விளக்கத்தைப் புரிந்துகொண்டு பேசுங்களெனத் தெரிவித்தார். இந்தியாவில் தமிழ்நாடு மாநிலம் உள்ளது. அதற்காக அது தனிநாடல்ல என்றும் அவர் கூறினார்.

## ஒவ்வொரு....

சமயம் மேற்படி விடயம் அவதானிக்கப்பட்டது.

'லங்கா ட்ரேடர்ஸ் அசோசியேஷன்' என்ற வர்த்தக நிறுவனத்தினால் வாடகைக்கு அமர்த்தப்பட்ட எம்.வி. மேர்ஸ் சஜிந்த என்ற கப்பல் மூலமாகவே இந்த அரிசி பருத்தித்துறைத் துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்டது.

நிறை குறைவாக இருப்பதை அவதானித்ததைத் தொடர்ந்து, யாழ். செயலகத்தினால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு சென்று - கப்பலில் எடுத்துவரப்பட்ட ஒவ்வொரு அரிசி மூடைகளையும், ஒவ்வொரு மூட்டையாக நிறுவை அளவை செய்தது. இதன்போது அனைத்து அரிசி மூடைகளும் 37.5 கிலோகிராம் தொடக்கம் 38.5 கிலோகிராம் வரையிலேயே இருப்பது அவதானிக்கப்பட்டது.

இவ்விடயங்கள் தொடர்பாக விபரமான அறிக்கையொன்று யாழ். செயலகத்தினால் தயாரிக்கப்பட்டு பிரதமரின் ஆலோசகரும் உணவு பாதுகாப்புப் பற்றிய அமைச்சுக்களுக்கிடையிலான ஆணைக்குழுவின் தலைவருமான கே.ஏச்.ஜே.விஜயதாசவுக்கும் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் செயலாளருக்கும் கடந்த 24 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரிசி விநியோகம் செய்த வர்த்தக நிறுவனத்தின் கூற்றுப்படி, ஒவ்வொரு அரிசி மூடையிலும் 50 கிலோ கிராம் அரிசி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மூடை ஒவ்வொன்றிலும் 50 கிலோ கிராம் நிறை என்றும் பொறிக்கப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.

இவ்விடயம் குறித்தும் இதே போன்று கடந்த காலத்தில் நிவாரண விநியோகத்திற்கு எடுத்துவரப்பட்ட அரிசியின் தரம் மற்றும் இது போன்ற பல பிரச்சினைகள் தொடர்பாகவும் யாழ்.செயலகம் மேற்படி அறிக்கையில் தெளிவாக விபரித்துள்ளது.

எதிர்காலத்திலும் இவ்வாறான பிரச்சினைகள் குறித்து தாம் மிகவும் உன்னிப்பாக அவதானிக்க வேண்டி இருப்பதாகவும், இவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு யாழ். செயலகம் பல ஆலோசனைகளை புனர்வாழ்வு அமைச்சுக்குச் சிபார்சு செய்திருக்கின்றது.

(க,லி,ச)

# ஏ-9 புனரமைப்புக்கு முன்னோடியாக கண்ணிகளை அகற்ற விசேட திட்டம்

(கிளிநொச்சி)

ஏ-9 வீதி புனரமைப்புச் செய்வதற்கு முன்னோடியாக, இவ்வீதிப்பகுதியில் கண்ணிவெடி அகற்றுவதற்கான விசேட திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இக்கண்ணிவெடி அகற்றும் திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக, ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே வீதி அபிவிருத்தி அதிகார சபையுடனும் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் பிரிவினருடனும் தொடர்பு கொண்டுள்ளது.

இக்கண்ணிவெடி அகற்றும் விசேட திட்டம் சுமார் ஆறுமாத காலப் பகுதியில் நிறைவு செய்யப்[illegible]மெனத் தெரியவருகிறது.

## விசாரணை......

செய்யப்பட்ட அரிசியில் முறைகேடு இடம்பெற்றிருப்பதாக, நேற்று நாடாளுமன்றில் ஜே.வி.பி. உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். புனர்வாழ்வு அமைச்சினால் ஒப்பந்தம் செய்யப்பட்ட தொகையை விடவும் குறைவான நிறையுள்ள அரிசியே அனுப்பிவைக்கப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் சிலர் பணத்தைப் பெற்றிருப்பதாகவும் ஜே.வி.பி. உறுப்பினர் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வாதத்தில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, அரிசி இறக்குமதியில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்தி - அதன் முடிவுகளை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யுமாறு தன்னைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்திருப்பதாகத் தெரிவித்தார்.

## வன்னியிலிருந்து....

பல்வேறுவகையான நெருக்கடிகளும் பிரச்சினைகளும் எதிர்நோக்கப்பட்டு வந்தன.

கடந்த காலத்தில் தென்பகுதியிலிருந்து எடுத்து வரப்படுகின்ற அரிசியின் தரம் பல சமயங்களில் பாதிக்கப்பட்டிருந்ததும் நிறைகுறைகள் ஏற்படுவதும் அவதானிக்கப்பட்டன. இவற்றைவிட பல்வேறு சிரமங்களும், அதிக பணச்செலவும் ஏற்பட்டு வந்தன.

தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற பகுதிகளில் மக்கள் மீளக்குடியமர்ந்து வழமையான விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதால், அரிசி உற்பத்தி அப்பகுயில் அதிகமாகவுள்ளது.

எனவே, இவற்றைக் கொள்வனவு செய்து யாழ்ப்பாணத்தில் நிவாரண விநியோகத்திற்கு பயன்படுத்துவதனால், யாழ்ப்பாணத்திலும், வன்னியிலும் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் அதிகம் பயனடைவார்கள் என்றும் தற்போதுள்ள நடைமுறைகளின்படி, இலங்கையிலுள்ள பிரபல வர்த்தகர்களும் இந்திய வர்த்தக நிறுவனங்களுமே அதிகம் நன்மையடைந்து வருகின்றன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூரிலிருந்து நிவாரணத்திற்குத் தேவையான அரிசியைக் கொள்வனவு செய்வதிலுள்ள அனுகூலங்கள் தொடர்பாக, மேலும் பல விடயங்களை யாழ். அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி, அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்தில், இவ்வாறான விடயங்கள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலிருந்து தலா இரண்டாயிரம் மெற்றிக்தொன் அரிசியை கேள்விப்பத்திரம் கோரல்முறை மூலம் கொள்வனவு செய்யமுடியும். இதன்மூலம் குடாநாட்டுக்குத் தேவையான ஆறாயிரம் மெற்றிக்தொன் தரமான அரிசியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

கொள்வனவு செய்யும் இந்த அரிசியை குடாநாட்டுக்கு ஏ-9 பாதை ஊடாக மிகவும் இலகுவாக எடுத்து வர முடியும் எனவும், இவற்றை நாவற்குழியிலுள்ள அரச களஞ்சியத்தில் சேமித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்றும், இதனால் வீண் விரயங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம் என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் அரிசிக்கு கடந்த 2001, 2002 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட விலையை வழங்க முடியும் என்றும் யாழ்.அரச அதிபர் புனர்வாழ்வு அமைச்சுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கிழக்கில்...

மட்டக்களப்பில் 80 சதவீதமான பகுதி எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. இங்கு சிறுவர்களைக் கடத்துவதாக எந்தவொரு குற்றச்சாட்டும் எழவில்லை. தமிழ் ஆயுதக் குழுக்கள் இயங்கும் பகுதிகளில் தான் இத்தகைய சம்பவங்கள் நடக்கின்றன. எனவே, இத்தகைய சம்பவங்களுக்கும் தமிழ் ஆயுதக்குழுக்களுக்கும் இடையில் தொடர்பிருப்பதாகக் கருதுகிறோம். அரசாங்கம் தமிழ் ஆயுதக்குழுக்களை ஒழுங்குமுறைக்குக் கொண்டுவர வேண்டும் எனக் கேட்டிருக்கிறோம்.

இயக்கத்தில் இணையவரும் சிறார்களை பெற்றோரிடம் உடனடியாகவே ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கிறோம். தாய், தந்தையை இழந்த அநாதரவான சிறார்களை கண்காணிப்புக்குழுவின் உதவியுடன் புனர்வாழ்வு, அநாதை இல்லங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம்.

தமிழ்மக்கள் மீது ஆத்திரம் கொண்ட சில முஸ்லிம் சக்திகள் தவறான கருத்துக்களை வெளியிடுகின்றனர். முஸ்லிம்களுடன் உறவை வளர்த்துக்கொள்ள வேண்டுமென்ற அடிப்படையில்தான், தலைவர் பிரபாகரன், ஹக்கீமுடன் உடன்பாடு செய்தார். இந்த உறவைக் குலைக்க முனையும் சக்திகள் - வரி, கப்பம், அறவிடுவதாகத் தேவையற்ற பிரச்சினைகளைக் கிளப்புகின்றனர்.

நாம் பல வருடங்களாக யுத்தத்தில் ஈடுபட்டுவிட்டு இப்போது சமாதானப் பாதையில் நின்று கொண்டிருக்கிறோம். எமது போராளிகளிடம் யாழ்ப்பாணம், வவுனியா உட்பட பல பகுதிகளில் சாரதி அனுமதிப் பத்திரம் கேட்கப்படுகிறது.

பல வருடங்களாக போரில் ஈடுபட்டுவந்த எமது போராளிகள், சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு அரசின் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும். அதற்கான சூழல் இன்னமும் உருவாகாததால், போராளிகளிடம் சாரதி அனுமதிப் பத்திரம் கேட்கக் கூடாதெனப் புலிகள் தரப்பு அழுத்தமாகக் கூறியுள்ளதாக கேணல் கருணா மேலும் தெரிவித்தார்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டேயின் மத்தியஸ்தத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் மூதத் தளபதி கேணல் கருணா அம்மான், சிறப்புத் தளபதி ரமேஸ், வாமன் ஆகியோரும் அரசு தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும், மேஜர் ஜெனரல் அன்ரன் விஜேந்திராவும், பொலிஸ் உயர் அதிகாரி மஜீத்தும் கலந்துகொண்டனர்.

தமிழ் - முஸ்லிம்களிடையே ஐக்கியத்தை ஏற்படுத்த, கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளை உள்ளடக்கிய கலந்துரையாடல்களை நடத்தவும் நேற்று தீர்மானம் எடுக்கப்பட்டது.

பேசப்பட்ட விடயங்களை போரினில் நடைபெறும் பேச்சுக்களின் போது சமர்ப்பிப்பதெனவும் முடிவு எடுக்கப்பட்டது என்றும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு வி[illegible] அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்த மீறல்கள் குறித்து பத்து நாட்களுக்கு ஒருமுறை தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும், அரசு தரப்புப் பிரதிநிதிகளும் போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவின் தலைமையில் ஆராய்ந்து தீர்வு காண்பது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

## மனிதநேய...

பிரதிநிதி ஒருவர் சிறானில் நடந்த கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், யாழ். குடாநாட்டில் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொள்ள வேண்டுமென அதிகாரபூர்வமாகக் கோருவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

## சிங்கள...

அத்துடன் அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களின் அரசாங்க அதிகாரிகளையும் மற்றும் அதிகாரிகளையும் இராணுவத் தளபதிகளையும் சந்திக்கவுள்ளதாகத் தெரிய வருகின்றது. பிரதமருடன் அமைச்சர்களான மிலிந்த மொறகொட, திலக் மாரப்பன ஆகியோரும் விஜயம் செய்யவுள்ளனர். எல்லைக் கிராமங்களில் இருந்து வெளியேறிய தமிழ்க் குடும்பங்களின் விபரங்களையும் பிரதமர் அறிந்துகொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## நிரந்தரத் தீர்வு...

றியடைவதற்கு சகல அரசியல் கட்சிகளும் கட்சி பேதங்களை மறந்து செயற்படவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தமையினால்தான், உதவி வழங்கும் நாடுகள் இலங்கைக்கு உதவி வழங்க முன்வந்திருக்கின்றன. பல வெளிநாட்டு முதலீட்டாளர்களும் இலங்கையில் முதலீடு செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் விபரித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசு[illegible] போது,

யுத்தத்தின் காயங்களே இன்னமும் ஆறாத நிலையில் விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களை களையுமாறு கோர முடியாது. அதற்கு இது தருணமல்ல என்றும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## இராமநாதன் - தங்கராணி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் தங்கராணி நேற்று (30.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இராமநாதனின் அன்பு மனைவியும், பிறேமச்சந்திரா (ரவி- டென்மார்க்), பிறேமமாலினி (இத்தாலி), பிறேமகுமார் (கிரி- நோர்வே), பிரபாகரன், சுபாசினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமுதினி (டென்மார்க்), விஜயகுமார் (இத்தாலி), சுஜீவா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் இராசரத்தினம் (துரைசிங்கம்) காலம் சென்ற அருணாசலம் (கிளி) மற்றும் இரத்தினம் (மானிப்பாய்) ஆகியோரின் மைத்துனியும் காலம் சென்ற இராசதுரை மற்றும் வைத்திலிங்கம் (மானிப்பாய்), இராசம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (31.01.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இராமநாதன் (கணவர்),
முன்னாள் உடுவில் 3 ஆம் வட்டார கிராமசேவை அங்கத்தவர்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

(221)

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.